
தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### <u>பீன்ஸ், கத்தரிக்காய் உள்ளிட்ட காய்கறிகளின் விலை உயர்வு</u>

கோயம்பேடு காய்கறிச் சந்தையில் பீன்ஸ், கத்தரிக்காய் உள்ளிட்ட காய்கறிகளின் விலை அதிகரித்துள்ளது. சென்னை கோயம்பேடு காய்கறிச் சந்தையில் கடந்த வாரம் கிலோ ரூ.40-க்கு விற்பனை செய்யப்பட்ட பீன்ஸ் விலை ரூ. 20 அதிகரித்து செவ்வாய்க்கிழமை ரூ.60-ஆக அதிகரித்துள்ளது. அதேபோல, கத்தரிக்காய், அவரைக் காய் ஆகியவற்றின் விலையும் கிலோவுக்கு ரூ.10 அதிகரித்துள்ளது. இது குறிதத்து கோயம்பேடு மொத்த காய்கறி வியாபாரிகள் கூறியபோது, மழை காரணமாக கோயம்பேடு காய்கறிச் சாந்தைக்கு வரும் காய்கறிகளின் வரத்து குறைந்துள்ளது. அதபோல, காய்கறிகளும் விரைவில் அழுகி விணாவதால், பீன்ஸ், கத்தரிக்காய், வெண்டைக்காய், அவரைக் காய், செப்செப் ஆகியவற்றின் விலை ரூ. 5 முதல் ரூ.20 வரை கிலோவுக்கு அதிகரித்துள்ளது என்றார்.

### <u>தமிழகத்தின் சில இடங்களில் இன்று மழை வாய்ப்பு</u>



தமிழகத்தின் சில இடங்களில் மட்டும் புதன்கிழமை மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: இலங்கை - தமிழக கடற்கரை அருகில் நிலை கொண்டிருந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை வலுவிழந்துள்ளது. இதனால் தமிழகத்தில் மழை குறையும். அதேவேளையில் அந்தமான் தீவுகளுக்கு அருகில் உள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை, அடுத்த 2 நாள்களில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக வலுப்பெறும். ஆனாலும் தமிழகத்தில் மழை இருக்காது. இந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி நகரும் திசையைப்

பொருத்தே தமிழகத்தில் மழை இருக்கும். தென் தமிழகத்தில் ஆங்காங்கே புதன்கிழமை லேசான மழையோ மிதமான மழையோ பெய்யும். வடதமிழகம், புதுவையில் வறண்ட வானிலை நிலவும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். மழை அளவு: மாநிலத்தில் செவ்வாய்க்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு: ராதாபுரத்தில் 60 மி.மீ., பாபநாசத்தில் 50 மி.மீ., பேச்சிப்பாறை, மதுரை ஆகியவற்றில் தலா 40 மி.மீ., செங்கோட்டை, ராஜாபாளையம், சங்கரன்கோவில், தென்காசி ஆகியவற்றில் தலா 30 மி.மீ., பாளையங்கோட்டை, கயத்தாறு, திண்டிவனம், விழுப்புரம் ஆகியவற்றில் தலா 20 மி.மீ., பெரியாறு, கன்னியாகுமரி, நாகர்கோவில் ஆகியவற்றில் தலா 10 மி.மீ. என்ற அளவில் மழை பெய்துள்ளது.

**காய்கறிகளின் விலை உயர்வு**



கோயம்பேடு காய்கறிச் சந்தையில் மழை காரணமாக கத்தரிக்காய், பீன்ஸ் உள்ளிட்ட காய்கறிகளின் விலை அதிகரித்துள்ளது. சென்னை கோயம்பேடு காய்கறிச் சந்தையில் கடந்த வாரம் கிலோ ரூ.40-க்கு விற்பனை செய்யப்பட்ட பீன்ஸ் விலை ரூ. 20 அதிகரித்து, செவ்வாய்க் கிழமை ரூ.60-க்கு விற்பனை செய்யப்பட்டது. அதேபோல, கத்தரிக்காய், அவரைக்காய் ஆகியவற்றின் விலையும் கிலோவுக்கு ரூ.15 வரை உயர்ந்துள்ளது. இது குறித்து கோயம்பேடு மொத்த காய்கறி வியாபாரிகள் கூறியது: மழை காரணமாக கோயம்பேடு காய்கறிச் சந்தைக்கு வரும் சில காய்கறிகளின் வரத்து கணிசமான அளவு குறைந்துள்ளது. அதே நேரத்தில் காய்கறிகளும் அழுகி சேதமடைவதால், பீன்ஸ், கத்தரிக்காய், வெண்டைக்காய், அவரைக்காய் ஆகியவற்றின் விலை கிலோவுக்கு ரூ.5 முதல் ரூ.20 வரை அதிகரித்துள்ளது என்றார்.

கோயம்பேட்டில் செவ்வாய்க்கிழமை விற்பனை செய்யப்பட்ட காய்கறிகளின் விலை நிலவரம் (கிலோவுக்கு)அடைப்புக் குறிக்கள் **பழைய விலை:**

நாட்டுத் தக்காளி 20 (18)

பெங்களூர் தக்காளி 25 (25)

சின்ன வெங்காயம் 40 (40)

பெரிய வெங்காயம் 30 (25)

பீன்ஸ் 60 (40)

கத்தரிக்காய் 40 (25)

அவரைக்காய் 50 (40)

சௌசௌ 25 (20)

வெண்டைக்காய் 25 (20)

புடலங்காய் 20 (15)

பச்சை மிளகாய் 30 (25)

கொத்துமல்லி (ஒரு கட்டு) 15 (10)

**<u>தொடர்மழை: விவசாயிகள் மகிழ்ச்சி</u>**

அருப்புக்கோட்டையில் கடந்த பல ஆண்டுகளாக தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழைக் காலங்களில் மழை பொய்த்துப் போனது. விவசாய நிலங்களும், நீர்ஆதாரங்களும் வறண்டன. விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு உள்ளிட்ட அனைத்தும் பாதிக்கப்பட்டன. இந்த ஆண்டும், தென்மேற்குப் பருவ மழைக் காலத்தில் இப்பகுதியில் மழை பெய்யவில்லை. ஆனால் வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் நல்லமழை பெய்துவருகிறது. மானாவாரி நிலங்களும் நல்ல பயனடைந்து வருகின்றன. பாலையம்பட்டி, கோபாலபுரம், கோவிலாங்குளம், கட்டங்குடி, ஆத்திபட்டி, பந்தல்குடி உள்ளிட்ட பகுதிகளில் பெய்யும் மழையால் மானாவாரி பயிர்கள் நன்கு வளர்ந்து வருகின்றன. இந்த ஆண்டு நல்ல விளைச்சல் கிடைக்கும் என இப்பகுதி விவசாயிகள் நம்பிக்கையுடன் உள்ளனர்.

## எழுமாத்தூரில் ரூ. 8 லட்சத்திற்கு கொப்பரை ஏலம்

எழுமாத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் தேங்காய் மற்றும் கொப்பரை ஏலம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. எழுமாத்தூர் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 196 மூட்டைகளில் 6 டன் எடையுள்ள கொப்பரைகளை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், முதல் தர கொப்பரை அதிகபட்ச விலையாக கிலோ ஒன்றுக்கு ரூ. 102.10-க்கும், குறைந்தபட்ச விலை ரூ. 97.20-க்கும், இரண்டாம் தர கொப்பரை அதிகபட்ச விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 100.30-க்கும், குறைந்தபட்ச விலை ரூ. 75.65-க்கும் என மொத்தம் ரூ. 6 லட்சத்து 25 ஆயிரத்து 932-க்கு ஏலம் நடைபெற்றது. இதே போல, 7 டன் எடையுள்ள 21 ஆயிரத்து 874 தேங்காய்கள் கொண்டு வரப்பட்டது. இதில், அதிகபட்ச விலையாக டன் ஒன்றுக்கு ரூ. 27 ஆயிரத்து 163-க்கும், குறைந்தபட்ச விலையாக ரூ. 23 ஆயிரத்து 692-க்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 1 லட்சத்து 88 ஆயிரத்து 481-க்கு ஏலம் நடைபெற்றது. மொத்தம் ரூ. 8 லட்சத்து 14 ஆயிரத்து 413-க்கு கொள்முதல் நடைபெற்றது.

## ரூ. 1.40 லட்சத்துக்கு சின்ன வெங்காயம் ஏலம்

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், செட்டிக்குளத்தில் உள்ள வெங்காய வணிக வளாகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற திறந்தமுறை ஏலத்தில் ரூ. 1.40 லட்சம் மதிப்பிலான சின்ன வெங்காயம் விற்பனையானது. இந்த திறந்தமுறை ஏலத்தில் அயிலூர், சிறுவாச்சூர், செட்டிக்குளம், மாவலிங்கை, எசனை, சிறுவயலூர், சத்திரமனை, பொம்மனப்பாடி, நாட்டார்மங்கலம், மருதடி, வடக்குமாதவி ஆகிய கிராமங்களைச் சார்ந்த 41 விவசாயிகள் சின்ன வெங்காயத்தை திறந்தமுறை ஏலத்துக்கு கொண்டு வந்தனர். இதில் பங்கேற்ற அரியலூர், செட்டிக்குளம், மங்கூன், சத்திரமனை, பொம்மனப்பாடி, பாடாலூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் 208 மூட்டை(11,537 கிலோ)

வெங்காயத்தை அதிகபட்சமாக 1 கிலோ ரூ. 27-க்கும், சராசரியாக ரூ. 14-க்கும் என ரூ. 1,40,472க்கு திறந்தமுறை ஏலத்தில் எடுத்தனர்.

## குடவாசலில் 10.40 மிமீ மழை

திருவாரூர் மாவட்டம், குடவாசலில் திங்கள்கிழமை 10.40 மிமீ மழை பதிவானது. திருவாரூர் மாவட்டத்தில் கடந்த இரு வாரங்களாக பருவமழை பெய்து வருகிறது. சில நாள்கள் மழைவிட்டிருந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு முதல் மழை பெய்யத் தொடங்கியது. திங்கள்கிழமை மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் பலத்த மழை பெய்தது. செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் பெய்த மழையளவு மில்லி மீட்டரில் வருமாறு: திருவாரூர்-8.60, நன்னிலம்-6.20, நீடாமங்கலம்-5.80, வலங்கைமான், பாண்டவையாறு தலைப்பு-5.60, மன்னார்குடி-5, திருத்துறைப்பூண்டி-4.

## வேளாண் அறிவியல் நிலையத்தில் வெண்பட்டுப்புழு வளர்ப்புப் பயிற்சி

செவ்வாய்க்கிழமை காலை லேசாக மழை பெய்தது. மதியத்துக்குப் பிறகு மழை பெய்யவில்லை. நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் கடந்த அக். 27-ம் தேதி முதல் 31-ம் தேதி வரை ஐந்து நாட்கள் வெண்பட்டுப்புழு வளர்ப்புப் பயிற்சி நடைபெற்றது. பயிற்சி நிறைவுநாள் நிகழ்ச்சியில் பங்கேற்ற தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக ஆராய்ச்சிக் குழு உறுப்பினர் மன்னார்குடி எஸ். ரெங்கநாதன் விவசாயிகளுக்கு சான்றிதழ் மற்றும் இடுபொருட்களை வழங்கிப் பேசியது: பட்டுப்புழு வளர்ப்பு கவிரி டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு தொடர்ந்து வருவாய் தரும் லாபகரமான விவசாய தொழில். இந்தப் பகுதி விவசாயிகளால் 1970-களிலேயே பட்டுப்புழு வளர்ப்பு சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது. இந்தத் தொழிலுக்கு சிறப்பான எதிர்காலம் உள்ளது என்றார். நபார்டு வங்கி திருவாரூர் மாவட்ட வளர்ச்சி அலுவலர் என். ரவிசங்கர் வாழ்த்திப் பேசினார். உதவிப் பேராசிரியர்கள் முனைவர் ராஜாரமேஷ், பட்டு வளர்ச்சி துறையைச் சேர்ந்த எஸ். ரமேஷ், ஏ. அருள்மொழி, டி. நடராஜன் ஆகியோர் பயிற்சி அளித்தனர். பயிற்சியில் திருவாரூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருச்சி, அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களைச் சேர்ந்த 65 விவசாயிகள்

பங்கேற்றனர். முன்னதாக நிலையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் க. சோழன் வரவேற்றார்.

## பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் 42 அடியைக் கடந்தது

பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் வெள்ள அபாய அளவைக் கடந்துள்ள நிலையில், கோதையாறு மற்றும் தாமிரவருணி ஆறுகளின் கரையோரப் பகுதி மக்களுக்கு செவ்வாய்க்கிழமை வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. வடகிழக்குப் பருவ மழையின் தீவிரம் காரணமாக கடந்த 3 ஆண்டுகளுக்குப் பிறகு குமரி மாவட்டத்தின் பிரதான அணையான பேச்சிப்பாறை அணை நிரம்பி வருகிறது. 48 அடி கொள்ளளவு கொண்ட இந்த அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு 42 அடியாக இருந்தது. அணைக்கு உள்வரத்தாக விநாடிக்கு 1,060 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இதனால் நீர்மட்டம் மேலும் உயர்ந்து வருகிறது. வெள்ள அபாய எச்சரிக்கை: அணையின் நீர்மட்டம் 42 அடியைக் கடந்து வரும் நிலையில் இந்த அணையிலிருந்து மறுகால் மதகுகள் வழியாக எப்போது வேண்டுமானாலும் தண்ணீர் வெளியேற்றப்படலாம் என்று பொதுமக்களுக்கு முன்னெச்சரிக்கை செய்யும் வகையில், பொதுப்பணித் துறையினர், மாவட்ட ஆட்சியருக்கும், வருவாய்த் துறையினருக்கும் வெள்ள அபாயம் குறித்து தகவல் தெரிவித்துள்ளனர். இதையடுத்து வருவாய்த் துறையினர், அணையிலிருந்து மறுகால் மதகுகள் வழியாக வெளியேறும் தண்ணீர் பாய்ந்து செல்லும் கோதையாறு மற்றும் தாமிரவருணி ஆறுகளின் கரையோரப் பகுதிகளான களியல், திற்பரப்பு, மாறப்பாடி, மூவாற்றுமுகம், திக்குறிச்சி, ஞாறான்விளை, குழித்துறை, முன்சிறை உள்ளிட்டவை பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்துள்ளனர். இதுகுறித்து, பொதுப்பணித் துறை அலுவலர் ஒருவர் கூறுகையில், பேச்சிப்பாறை அணையில் நீர்மட்டம் 42 அடியைக் கடந்து செல்லும் நிலையில், அணையிலிருந்து எப்போது வேண்டுமானாலும் உபரி தண்ணீர் திறக்கப்படலாம் என்று பொதுமக்களை எச்சரிக்கை செய்யும் வகையில் வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. எனினும் அணையின் நீர்மட்டம் 46 அடியை நெருங்கும் போது தான் மறுகால் மதகுகள் திறக்கப்படும். மழை

தீவிரமாக இருந்தால் 46 அடி நீர்மட்டம் உடனடியாக எட்டிவிடும், மழை குறைந்தால் அந்த அளவை எட்டுவதற்கு இரண்டு அல்லது மூன்று நாள்கள் ஆகலாம். பேச்சிப்பாறை அணையின் மொத்த கொள்ளளவு 4,350 மி.க. அடியாகும். தற்போது இந்த அணையின் நீர்மட்டம் 42 அடியாக உள்ள நிலையில், அணையில் 3,530 மி.க. அடி தண்ணீர் தேங்கியுள்ளது. இது அணையின் மொத்தக் கொள்ளளவில் 81 சதவீதமாகும் என்றார்.

**மழை பாதித்த பகுதிகளில் தோட்டக்கலைத் துறையினர் ஆய்**வு

விழுப்புரம் மாவட்டத்தில் மழை பாதித்த பகுதிகளில் தோட்டக்கலைத் துறையினர் திங்கள்கிழமை ஆய்வு செய்தனர். மரக்காணம் பகுதியில் சில தினங்களாக தொடர் மழை பெய்தது. இதன் காரணமாக தக்காளி, மிளகாய், கத்தரிக்காய் தோட்டங்கள் பாதிப்படைந்துள்ளன. திண்டிவனம் தோட்டக்கலைத் துறை உதவி வேளாண்மை அலுவலர்கள் வேல்முருகன், பாஸ்கர் ஆகியோர் நகர், செட்டிக்குளம், வடநெற்குணம், நல்லம்பாக்கம் கிராமங்களில் மழையால் பாதிக்கப்பட்ட தோட்டப் பயிர்களை ஆய்வு செய்தனர்

**11-ல் விவசாயத் தொழிலாளர்கள் சங்கம் ஆர்ப்பாட்டம்**

வேலை உறுதித் திட்ட பணிக் காலத்தை 200 நாள்களாக அதிகரிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி நவம்பர் 11-ல் ஆர்ப்பாட்டம் நடத்த விவசாயத் தொழிலாளர் சங்கம் முடிவு செய்துள்ளது. தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர்கள் சங்க கடலூர் மாவட்ட குழுக் கூட்டம் மாவட்டத் தலைவர் நாகராஜன் தலைமையில் அண்மையில் திட்டக்குடியில் நடைபெற்றது. மாவட்ட பொருளாளர் பட்டுசாமி முன்னிலை வகித்தார். வட்டச் செயலர் முருகவேல் வரவேற்றார். மாவட்டச் செயலர் சுப்பிரமணியன் தீர்மானங்களை வலியுறுத்திப் பேசினார். தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் அனைத்து ஒன்றியங்களிலும் வேலைவாய்ப்பு வழங்க வேண்டும், 100 நாள் வேலையை 200 நாள்களாக உயர்த்த வேண்டும், பயனாளிகளுக்கு கூலியை ரூ.400 ஆக உயர்த்தித் தர வேண்டும், சமூக பாதுகாப்புத் துறை மூலம் முதியோர், விதவை, மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டு

வங்க உதவித்தொகையை தொடர்ந்து வழங்க வேண்டும். மாவட்டத்தில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் குடும்ப அட்டை வழங்கி 9 ஆண்டுகளுக்கு மேல் ஆகியுள்ளதால் தற்போது குடும்ப அட்டை கிழிந்து பயனற்ற நிலையில் உள்ளது. எனவே, புதிய குடும்ப அட்டை வழங்க மாவட்ட நிர்வாகம் உத்தரவிட வேண்டும். புதிய குடும்ப அட்டை கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கும் காலதாமதம் இன்றி குடும்ப அட்டை வழங்க வேண்டும். இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி வரும் 11ஆம் தேதி மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள் முன் ஆர்ப்பாட்டம் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் வட்டத் தலைவர்கள் குப்புசாமி, வேல்முருகன், சகாயராஜ், நிர்வாகிகள் பூபாலன், இளையபெருமாள், கோவிந்தராசு, ரஜினியம்மாள், அன்பழகன், வைத்தியநாதசுவாமி, ராதாகிருஷ்ணன், முத்துவேல் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## <u>மாவட்டத்திற்கு 3,190 மெட்ரிக் டன் யூரியா வந்தது:தேவைக்கேற்ப பயன்படுத்த வேண்டுகோள்</u>

கடலூர்:கடலூர் மாவட்டத்தில் நிலவி வந்த யூரியா தட்டுப்பாட்டை போக்கிட முதல் கட்டமாக நேற்று 3,190 மெட்ரிக் டன் வரவழைத்து அனைத்து தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. யூரியாவை, தேவையான அளவு பயன்படுத்த வேளாண் துறை அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.கடலூர் மாவட்டத்தில், நடப்பு சம்பா பருவத்தில் இதுவரை 2 லட்சத்து 15 ஆயிரம் ஏக்கரில் நெல் நடவு செய்யப்பட்டுள்ளது. நாற்று நட்ட சில தினங்களில் கடந்த மாதம் பெய்த கனமழை காரணமாக நடவுப் பயிர்கள் சேதமடைந்தன.மழையில் சேதமடைந்த பயிர்களைக் காப்பாற்றிட யூரியா உரத்தை விவசாயிகள் பயன்படுத்தத் துவங்கியுள்ளதால் தேவை அதிகரித்துள்ளது. மேலும்,

தற்போது மழை பெய்து வருவதால் முந்திரி விவசாயிகளும் யூரியாவை அதிக அளவில் பயன்படுத்தி வருவதால் யூரியா தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மாவட்டத்தின் தேவை:யூரியாவைத் தவிர்த்து பிற உரங்களுக்கு வழங்கி வந்த மானியங்களை மத்திய அரசு ரத்து செய்து விட்டதால், யூரியா மட்டுமே விலை குறைவாக (50 கிலோ மூட்டை 271 ரூபாய்) கிடைப்பதால் விவசாயிகள் யூரியாவை பயன்படுத்தவே விரும்புவதால் தட்டுப்பாடு அதிகரித்து வருகிறது.இதனைப் பயன்படுத்தி தனியார் உர விற்பனை நிலையங்களில் கூடுதல் விலைக்கு விற்கத் துவங்கிதால், விவசாயிகள் பலர், நாற்று நட்டு 15 நாட்களுக்கு மேலாகியும், மேலுரமாக யூரியா போட முடியாமல் பெரும் சிரமத்திற்கு உள்ளாகினர். மாவட்டத்திற்கு நவம்பர் மாதத்திற்கு 6,700 மெட்ரிக் டன் யூரியா தேவை ஏற்பட்டுள்ளது. யூரியா வந்தது அதனைத் தொடர்ந்து மாவட்ட நிர்வாகம் மேற்கொண்ட தொடர் நடவடிக்கை காரணமாக முதல் கட்டமாக இப்கோ நிறுவனம் மூலம் ஆந்திரா மாநிலம், காக்கி நாடாவிலிருந்து 3,190 டன் யூரியா சரக்கு ரயிலில் விருத்தாசலத்திற்கு நேற்று முன்தினம் வந்திறங்கியது. அதனை நேற்று லாரிகள் மூலம் மாவட்டத்தில் உள்ள 167 தொடக்க வேளாண் கூட்டுறவு மையங்களுக்கு அனுப்பப்பட்டது. எஞ்சிய யூரியா அடுத்த வாரம் வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதுவரை விவசாயிகள் யூரியாவை தேவைக்கு ஏற்ப பயன்படுத்திட வேளாண் துறை அதிகாரிகள் ஆலோசனை வழங்கியுள்ளனர். யூரியா அதிகரித்தால் பூச்சி தாக்கும் :பயிருக்கு தழைச்சத்து அதிகரிக்கவே யூரியா பயன்படுத்தப்படுகிறது. ஏக்கருக்கு 22 கிலோ யூரியா மேலுரமாக போட்டால் போதுமானது. கூடுதலாக பயன்படுத்துவதால் பயிர் செழித்து வளரும். இதன் காரணமாக பயிரில் பூ பூக்கும் காலம் தள்ளிப்போவதோடு, நோய் தாக்குதல் அதிகரிக்கும். அதைக் கட்டுப்படுத்த பூச்சி மருந்து தெளிக்க வேண்டும்.அதன் காரணமாக கூடுதல் செலவினம் ஏற்படும். அப்படியே செய்தாலும் உற்பத்தி பாதிக்கும்.யூரியாவைத் தவிர்க்க ஆலோசனை இதனைத் தவிர்க்க விவசாயிகள், தங்கள் பகுதி வேளாண் அதிகாரிகளின் ஆலோசனை பெற்று நாற்று நட்டபின் முதல் களையெடுப்பின் போது (30

நாளில்) முதல் முறையாகவும், இரண்டாம் முறை களை எடுத்த பின் (பூ வைக்கும் பருவத்தில்) இரண்டாம் முறையாக ஏக்கருக்கு 22 கிலோ யூரியாவை மேலுரமாக பயன்படுத்தினால் போதுமானது. யூரியா பயன்பாட்டை குறைத்திட ஏக்கருக்கு 4 கிலோ யூரியா, ஒரு கிலோ ஜிங்க் சல்பேட் ஆகியவற்றை 200 லிட்டர் தண்ணீரில் கரைத்து கைத் தெளிப்பான் மூலம் பயிர் நன்கு நனையும் படி தெளித்தால் போதுமானது. அல்லது 800 கிராம் அசோஸ் பைரில்லத்தை 20 கிலோ தொழு உரத்துடன் கலந்து தெளித்தால், காற்றில் உள்ள தழைச் சத்தை பயிர்கள் கிரகித்துக் கொள்ளும். மேற்கண்ட முறைகளை கையாண்டால் கூடுதல் செலவையும், பூச்சி தாக்குதலையும் தவிர்க்க முடியும்.

## பயிர் காப்பீட்டு திட்டத்தில் சேர விவசாயிகளுக்கு அழைப்பு

திருவள்ளூர்: விவசாயிகள் பேரிடர் உள்ளிட்ட இயற்கை இடர்பாடுகளினால் ஏற்படும் இழப்பினை பெற, பயிர் காப்பீட்டு திட்டத்தில் சேர்ந்து பயனடையலாம் என, வேளாண்மை துறை கேட்டுக் கொண்டுள்ளது. இதுகுறித்து, திருவள்ளூர் மாவட்ட வேளாண் இணை இயக்குனர் சுந்தர்ராஜன் கூறியதாவது: திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள், தாங்கள் பயிரிட்டுள்ள பயிர்களை தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தில் சேர்ந்து பயன் பெறலாம். இதன் மூலம் இயற்கை இடர்பாடுகளான மழை, வெள்ளம், வறட்சி போன்றவற்றால் ஏற்படும் இழப்பீட்டினை ஈடு செய்ய முடியும். குறைந்தபட்சம், 30 ஆயிரம் ரூபாய்க்கான காப்பீடு செய்தால், அதில், ஒரு சதவீதம் பிரீமியமாக செலுத்த வேண்டும். பயிர் கடன் பெறாதவர்கள், வரும், 15ம் தேதிக்குள்ளும், பயிர் கடன் பெறும் விவசாயிகள், வரும், 30ம் தேதிக்குள்ளும் இத்திட்டத்தில் சேரலாம். பயிர் கடன் பெறாத சிறு, குறு மற்றும் பெரிய விவசாயிகளுக்கு, பிரீமியம் தொகையில், 50 சதவீதமும், கடன் பெறாத சிறு, குறு விவசாயிகளுக்கு, 55 சதவீதம், பெரிய விவசாயிகளுக்கு, 50 சதவீதம் மானியம் வழங்கப்படும். மேலும், விவரங்களுக்கு, 044 27662852 என்ற தொலைபேசி எண்ணில் தகவல் பெறலாம். இவ்வாறு, சுந்தர்ராஜன் கூறினார்.

**காஃபி, டீ விலை உயர்வு**

வேலூர் : பால் விலை உயர்வால், வேலூரில் காஃபி, டீ விலை உயர்த்தப்பட்டுள்ளது. தமிழக அரசு, ஆவின் பால் கொள்முதல் விலை லிட்டருக்கு ஐந்து ரூபாயும், விற்பனை விலையை லிட்டருக்கு, 10 ரூபாயும் உயர்த்தியது. பால் விலை உயர்ந்துள்ளதால் டீ கடைகள், ஹோட்டல்களில் டீ, காஃபி விலை உயர்ந்துள்ளது. 8 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட டீ, 10 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. 12 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட காஃபி, 15 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இந்த விலை உயர்வு நேற்று முதல், வேலூர் மாவட்டத்தில் அமலுக்கு வந்தது.

**மல்பெரி செடி விளைச்சலில் பட்டுப்புழு வளர்ப்பு**



ஒரே கல்லில் இரண்டு மாங்காய், என்பது போல, சிவகங்கை அருகே விவசாயி ஒருவர், விவசாய பயிர்களுடன், துணை தொழிலாக பட்டுப்புழு வளர்ப்பிலும் ஆர்வம் காட்டி வருகிறார். சிவகங்கை ஒக்கூரை சேர்ந்தவர் விவசாயி எஸ்.ராமநாதன்,70. இவரது நிலத்தில் கரும்பு, நெல் நடவு செய்துள்ளதோடு, பழத்தோட்ட பண்ணை நடத்துகிறார். குறிப்பாக மல்பெரி செடி வளர்த்து, அதற்கு துணை தொழிலாக பட்டுப்புழு வளர்க்கும் பணியிலும் ஆர்வமுடன் ஈடுபட்டுள்ளார். **விவசாயி எஸ்.ராமநாதன் கூறியதாவது:** எட்டு ஆண்டுகளாக 3 ஏக்கரில் மல்பெரி செடி வளர்த்து வருகிறேன். மல்பெரி செடியை, பட்டுப்புழுக்களின் வளர்ச்சிக்காக அறுவடை செய்து, பட்டுக்கூடு உற்பத்தி செய்யும் துணை தொழிலையும் செய்து வருகிறேன். ஏக்கருக்கு மல்பெரி செடி நடவு செய்ய, ரூ.12 ஆயிரம் வரை செலவாகும். இதற்கு பட்டு வளர்ச்சித்துறையினர், ரூ.10,500 வரை மானியமாக வழங்குகின்றனர். குறைந்தது 1 முதல் அதிகபட்சம் 5 ஏக்கர் வரை மல்பெரி செடி வளர்க்க மானியம் வழங்கப்படுகிறது. ஒரு முறை மல்பெரி செடியை நடவு செய்யவேண்டும். தொடர்ந்து 6 மாதங்களுக்கு நல்ல

தண்ணீர் விட்டு, உரங்கள் இட்டு பராமரிக்க வேண்டும். அதற்கு பின், நன்கு வளர்ந்த மல்பெரி செடி இலைகளை, 65 முதல் 90 நாட்களுக்கு ஒரு முறை எடுக்க வேண்டும். **துணை தொழில்:** இந்த செடிகளை எனது நிலத்தில் ஏற்படுத்தியுள்ள பட்டுப்புழு வளர்ப்பு குடோனில் வளரும் புழுக்களுக்கு உணவாக வழங்குவேன். இதன் மூலம், பட்டுப்புழுக்கள் வளர்ந்து, பட்டு நூல் கூடு தயாராகும். இந்த கூட்டினை, பட்டு வளர்ச்சித்துறையினர் எடுத்து சென்று, பட்டு நூல் தயாரிக்க பயன்படுத்துவர். இரண்டு ஏக்கரில் நடவு செய்த, மல்பெரி செடி மூலம் கிடைத்த இலையை போட்டு, பட்டு புழு வளர்த்தால், முட்டை வைத்ததில் இருந்து 23 நாட்கள் கழித்து, 160 கிலோ பட்டுக்கூடு கிடைக்கும். சாதாரணமாகவே, பட்டுக்கூட்டின் விலை கிலோ ரூ.300 வரை விற்கிறது. 2 ஏக்கரில் கிடைக்கும் மல்பெரி செடியின் மூலம், பட்டுக்கூடு வளர்த்து விற்பனை செய்தால் செலவு போக மாதம் ரூ.28 ஆயிரம் கிடைக்கும். **மானியம்:** பட்டுப்புழு வளர்ப்பு ஷெட்டை 1,500 சதுரடியில் அமைக்க, பட்டுவளர்ச்சித்துறை ரூ.75 ஆயிரம், தளவாட சாமானுக்கு ரூ.35 ஆயிரம் மானியம் வழங்குகிறது. இது தவிர மைசூருவில் இருந்து பட்டுப்புழு முட்டை வாங்கி வர போக்குவரத்து செலவு தொகையாக 50 சதவீதமும் வழங்குகிறது. ஒட்டு மொத்தத்தில் மல்பெரி செடி வளர்த்து பட்டுப்புழு வளர்ப்பிற்கான ஒட்டு மொத்த செலவில், 20 சதவீதத்தை மட்டுமே விவசாயிகள் செலவழிக்கவேண்டும், என்றார். ஆலோசனை பெற 94430 14354ல் தொடர்பு கொள்ளலாம். **-வெங்கடேசன், சிவகங்கை**

## நவீன தொழில்நுட்பம்



**மெத்தைலோ பாக்டீரியா நுண்ணுயிர் உரம்:**இலைகளின் மேற்புறத்திலும் உட்புறத்திலும் வாழும் பாக்டீரியாக்களில் மெத்தைலோ பாக்டீரியா என்றும் நன்மை செய்யும் பாக்டீரியா மிக முக்கியமானது. இப்பாக்டீரியா செடிகளின் இலைப்பரப்பிலும் வேர் மண்டலத்திலும் காற்று, தண்ணீர், மண், கல் அனைத்து இடங்களிலும் (காற்று போகாத இடங்கள் தவிர) காணப்படுகிறது. இலைகளில் வேதியல் கூறுகள் மூலம் பல

கரிமப்பொருள்கள் உருவாகின்றன. அவைகளில் மெத்தனால் என்னும் கரிமப்பொருள் முக்கியம் வாய்ந்தது. இந்த மெத்தனால் இலைகளில் பெக்டின் எனப்படும் கரிமப்பொருள் உயிர்வேதியல் முறையில் சிதைவடையும் போது உருவாகிறது. மெத்தைலோ பாக்டீரியா இலைகளில் இருப்பதால் ஸ்டொமேட்டா மூலம் வெளியாகும் இந்த மெத்தனாலை உணவாக உட்கொண்டு வாழ்கிறது. மாறாக மெத்தைலோ பாக்டீரியா செடிகளுக்கு பயிர் வளர்ச்சி ஊக்கிகளான சைட்டோகைனின் ஆக்ஸின்களை அளிப்பதன் மூலம் செடிகள் நன்கு வளர்ச்சியடைகின்றன. பிபிஎப்எம்ஐ திரவ நுண்ணுயிர் உரமாக பயன்படுத்தலாம். இந்த பாக்டீரியா ஆய்வகத்தில் வளரும்போது இளஞ் சிவப்பு நிறம் உடையதாக இருப்பதால் இது பொதுவாக பிபிஎப்எம் என்று அழைக்கப்படுகிறது. விதைகளை நடுவதற்கு முன்பாக விதைகளின் கடினத் தன்மையைப் பொறுத்து பிபிஎப்எம் நுண்ணுயிர் திரவ கரைசலில் 5 முதல் 15 நிமிடம் நன்கு ஊறவைத்து பின்பு நிழலில் 15 நிமிடம் உலர வைத்து நடுவதன் மூலம் விதைகளின் முளைப்புத்திறன் நாற்றுக்களின் வீரியம் மற்றும் வளர்ச்சி அதிகரிக்கிறது. மேலும் விதைகளின் முளைப்புக் காலம் ஒன்று முதல் இரண்டு நாட்கள் குறைக்கப்படுகிறது. பிபிஎப்எம் திரவ நுண்ணுயிர் உரத்தை தொடர்ந்து பயன்படுத்துவதன் மூலம், பயிர்களின் வளர்ச்சி, வளர்ச்சி காலம், பூக்கும் காலம், காய்க்கும் காலம் 5 முதல் 7 நாட்கள் வரை குறைக்கப்படுகிறது. மேலும் காய்கள், பூக்கள், பழங்களின் நிறம், திடம், பருமன் அதிகரிக்கிறது. பூ, காய் பிடிக்கும் பருவத்தில் பிபிஎப்எம் தெளிப்பதன் மூலம் பூக்கள், காய்கள் உதிர்வதைத் தடுக்கலாம். தென்னை, மா, கொய்யா, பப்பாளி, முருங்கை, மாதுளை போன்ற பயிர்களுக்கு சொட்டுநீர் பாசனம் மூலமாக வேர்களுக்கு சென்று அடையுமாறு கொடுக்கலாம். அல்லது கைத்தெளிப்பான் அல்லது விசைத் தெளிப்பானைக் கொண்டு கைக்கு எட்டும் உயரம் வரை இலைகள் நன்கு நனையும்படி தெளிக்கலாம். நீர்ப்பற்றாக்குறை அல்லது வறட்சியால் பாதிக்கப்படும் பயிர்களுக்கு பிபிஎப்எம் தெளிப்பதன் மூலம் பயிர்கள் நீரின் தேவையின்றி 5 முதல் 10 நாட்கள் வரை (மண்ணின் ஈரப்பதம் பொறுத்து) வாடாமல் வறட்சியைத் தாங்கும் தன்மையைப் பெறுகின்றன. இந்த பிபிஎப்எம் ஐ இயற்கை பயிர் ஊக்கி என்றும் அழைக்கலாம். இந்த திரவ நுண்ணுயிர் உரத்தை உபயோகிக்கும் போது ஒட்டும் திரவம், அரிசி

கஞ்சி ஆகியவற்றை சேர்க்க தேவையில்லை. காவிரிடெல்டா பகுதிகளான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், திருச்சி ஆகிய மாவட்டங்களில் நெல் சாகுபடியில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்ட போது 1 லட்சத்து 25 ஏக்கர் நிலப்பரப்பில் வாடிய நெற்பயிர்களுக்கு ஏக்கருக்கு 200மிலி பிபிஎப்எம் ஐ 200 லிட்டர் நீர் கலந்து விசைத் தெளிப்பான் மூலம் சென்ற ஆண்டு தெளிக்கப்பட்டதில் நெற்பயிர் 10 முதல் 15 நாட்கள் வரை தண்ணீர் இல்லாத நிலையிலும் வறட்சியை தாங்கும் தன்மை பெற்றது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் வேளாண் நுண்ணுயிரியல் துறையில் போர்க்கால அடிப்படையில் 25 ஆயிரம் லிட்டர் பிபிஎப்எம் திரவ நுண்ணுயிர் உரம் உற்பத்தி செய்து காவிரிடெல்டா பகுதியிலுள்ள நெற்பயிர்களுக்கு தெளித்து பயிர் காப்பாற்றப்பட்டது. (தகவல்: முனைவர் எம்.செந்தில்குமார், முனைவர் எஸ்.குணசேகரன், வேளாண் நுண்ணுயிரியல் துறை, த.வே.ப.கழகம்) கோயம்புத்தூர்-641 013. போன்: 0422 - 661 1294, 661 1394. **- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

## <u>மூலிகை சாகுபடியில் மானியம்</u>



இந்தியாவில் மூலிகையின் தேவை அதிகரிக்கும் அளவு மூலிகை உற்பத்தியானது இல்லை. 90% மேல் கம்பெனிகளின் தேவையானது இயற்கையாக காணப்படும் மூலிகைகளை சேகரித்து அனுப்புவதன் மூலம் நிவர்த்தி செய்யப்படுகிறது. எனவே மூலிகை பயிரிடுதல் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. ஆகையால் மூலிகைப் பாதுகாப்பு மற்றும் அதன் தேவைகளைக் கருத்தில் கொண்டு தேசிய மூலிகைப் பயிர் வாரியமானது 57 தாவரங்களைப் பயிரிடுவதற்கு மானியம் வழங்கி ஊக்குவிக்கிறது. இவ்வாரியமானது அழிந்து வரும் அரிதான மூலிகைகளை பயிரிடுவதற்கு 75%மும், உற்பத்தி குறைந்து வரும் நீண்ட காலப் பயிர் களுக்கு 50% மும் மற்ற மூலிகைகளுக்கு 20%மும் மானியம் வழங்குகிறது. மானியத்தை தனி விவசாயியாக அல்லாமல் குழுவாக

செயல்பட்டால் பெறுதல் எளிதாகும். தமிழ்நாட்டின் தட்பவெப்ப நிலையில் நன்கு வளரும் மூலிகைகள் மற்றும் அகனை 1 ஹெக்டேரில் சாகுபடி செய்ய மூலிகைப் பயிர் வாரியத்தால் பரிந்துரைக்கப்பட்டுள்ள மானியத்தைக் காண்போம். வசம்பு- 20%, சோற்றுக்கற்றாழை-20%, பேரரத்தை - 20%, சித்தரத்தை -20%, தண்ணீர்விட்டான் கிழங்கு - 20%, வேம்பு - 20%, நீர் பிரம்மி - 20%, சாரணத்தி - 20%, சென்னா (அ) அவுரி - 20%, நித்திய கல்யாணி - 20%, வல்லாரை -20%, சங்குபுஸ்பம் -20%, மாகாளி - 20%, வாவிலங்கம் -20%, நெல்லி -20%, சிறுகுறிஞ்சான் - 20%, நன்னாரி -20%, கச்சோலம் -20%, பூனைக்காலி -20%, துளசி-20%, கீழாநெல்லி -20%, திப்பிலி -20%, செங்கொடிவேலி-20%, குறுந்தொட்டி-20%, மணத்தக்காளி-20%, சீனித்துளசி-20%, நீர்மருது-20%, தான்றி-20%, கடுக்காய்-20%, சீந்தில் -20%, நொச்சி-20%, வெட்டிவேர்-20%, அமுக்கிரா-20%, வில்வம்-50%, வாகை-50%, மாவிலங்கம்-50%, கண்வலிக்கிழங்கு- 50%, பாலா-50%, கொடிவேலி -50%, வேங்கை-50%, நஞ்சறுப்பான்-50%, சந்தண வேங்கை - 75%, சந்தனம் - 75%

**குறிப்பு:** விவசாயிகள் மேற்கண்ட மூலிகைகளை பயிரிடுவதற்கு தேர்ந்தெடுக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை.

1. சந்தைப்படுத்த வாய்ப்புள்ள மூலிகைகளை மட்டுமே தேர்வு செய்ய வேண்டும். மானியக்கைக் கருத்கில் கொண்டு சாகுபடி செய்யக் கூடாது. சிறந்த மூலிகைக் கம்பெனிகளுடன் ஒப்பந்த சாகுபடியை மேற்கொள்வது நல்லது.

2. இடவசதி மற்றும் நீர் வசதியைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

3. தரமான விதைகளை தேர்வு செய்வது மிகவும் முக்கியம்.

4. சாகுபடி முறை, அறுவடை முறை, பதப்படுக்கும் முறை மற்றும் செலவினங்களை மூலிகைகளை தேர்வு செய்யும் முன் அறிந்து கொள்வது அவசியமாகும். மானியம் பற்றிய விபரங்களை அருகில் உள்ள தோட்டக்கலை அலுவலகத்தை தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.**ந.கணபதிசாமி, திருமங்கலம், மதுரை. 88700 12396**

## <u>கோமுகி ஆற்றில் உள்ள தடுப்பணைகள்... நிரம்பின:50 ஆயிரம் ஏக்கரில் விவசாயம் செழிக்கும்</u>

தியாகதுருகம்:கோமுகி ஆற்றில் உள்ள தடுப்பணைகள் நிரம்பியதால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து கிணற்று பாசன விவசாயிகள்

மகிழ்ச்சியடைந்துள்ளனர். ஆற்றை ஒட்டியுள்ள ஏரிகளுக்கும் நீர்வரத்து கிடைத்துள்ளதால் 2 ஆண்டுகளுக்கு பின் இப்பகுதியில் விவசாயம் செழிக்க வழி ஏற்பட்டுள்ளது. விழுப்புரம் மாவட்ட எல்லையான கல்வராயன் மலையில் உற்பத்தியாகும் கோமுகி ஆற்றின் குறுக்கே கச்சிராயபாளையம் அருகே அணை கட்டப்பட்டுள்ளது. மலையில் பெய்யும் மழைநீர் மேகம், பெரியார் அருவிகள் வழியே கல்படை ஆறாக உருவெடுத்து அணையில் சேகரமாகிறது. அணையில் மொத்த கொள்ளளவு 46 அடியாகும். இதன் மூலம் 11 ஆயிரம் ஏக்கர் ஆயக்கட்டு நிலம் நேரடி பாசனம் பெறுகிறது.

தடுப்பணை பாசனம்

அணை நிரம்பும் போது வெளியேற்றப்படும் உபரி நீர் தடுப்பணைகளில் சேமிக்கப்படுகிறது. தோப்பூர், சோமண்டார்குடி, கள்ளக்குறிச்சி, நிறைமதி, விருகாவூர் ஆகிய இடங்களில் தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளன. இதில் தேக்கப்படும் தண்ணீர் சுற்று வட்டாரத்தில் 30க்கும் மேற்பட்ட ஏரிகளுக்கு எடுத்து சென்று பாசனத்திற்கு பயன்படுத்தப்படுகிறது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் உயர்வதால் இப்பகுதியில் கிணற்று நீர் பாசனம் செழிக்க காரணமாக தடுப்பணைகள் விளங்குகின்றன. இதனால் மறை முகமாக 50 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் நன்செய் பயிர்களான நெல், கரும்பு, மஞ்சள், மரவள்ளி பயிர் களின் மகசூலுக்கு கோமுகி ஆறு காரணமாக இருக்கிறது. கட்டுமானம் சீரமைப்பு:தடுப்பணைகள் பல இடங்களில் சேதமடைந்த நிலையில் தண்ணீர் கசிந்து தண்ணீர் வீணாகியது. கடந்த 2 ஆண்டுக்கு முன் உலக வங்கி நிதியுதவியுடன், வெள்ளாற்று உபவடிநில சீரமைப்பு திட்டத்தின் கீழ் அனைத்து தடுப்பணைகளும் செப்பனிடப்பட்டது. கான்கிரீட் கலவையால் விரிசல்கள் சரிசெய்து, தண்ணீர் கசியாமல் கட்டுமானம் உறுதி செய்யப்பட்டது. நிறைமதி அருகே கட்டியுள்ள குரூர் தடுப்பணை கடந்த 2009 ம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் முழுவதும் அடித்து செல்லப்பட்டு சேதமடைந்தது. இது குறித்து "தினமலர்' நாளிதழில் செய்தி வெளியானதால் இத்தடுப்பணையும் 1.75 கோடி ரூபாய் திட்ட மதிப்பில் மீண்டும் கட்டப்பட்டு புதுப்பிக்கப்பட்டது. பெருகிய நீர்வளம்:கடந்த ஆண்டு பருவமழை குறைந்த அளவே பெய்ததால் அணை நிரம்பாமல்

விவசாயம் பெரிதும் பாதித்தது. தொடர்ந்து 2 ஆண்டுகளாக ஆற்றில் வெள்ளப்பெருக்கு இன்றி தடுப்பணைகள் பாலைநிலம் போல் வறண்டது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து பயிர் மகசூல் குறைந்தது. குறிப்பாக நன்செய் பயிர்களை சாகுபடி செய்வது கேள்விக்குறியானது.

கடந்த வாரம் கல்வராயன் மலையில் மழை கொட்டியது. கடந்த 29ம் தேதி நள்ளிரவு கோமுகி அணை நிரம்பியதால் உபரி நீர் திறந்து விடப்பட்டு ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்தது. தடுப்பணைகளில் தண்ணீர் நிரம்பி வழிந்தது. இங்கிருந்து நீர் வரத்து பெரும் சுற்றுவட்டார ஏரிகளும் நிரம்பின. இதனால் ஆற்றுப்படுகையில் நிலத்தடி நீர்மட்டம் வேகமாக உயர்ந்துள்ளது. வடகிழக்கு பருவமழை துவக்கத்தில் அணை நிரம்பி ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதால் விவசா யிகள் நம்பிக்கையில் உள்ளனர். நீர்வளம் அதிகரித்ததால் 2 ஆண்டுக்கு பின் இங்கு விவசா யம் செழிக்க வழி பிறந்துள்ளது. இதேவேளையில், மற்ற பகுதி யில் எதிர்பார்த்த அளவு மழை பெய்யாததால் நீர்நிலைகளுக்கு தண்ணீர் வரத்தின்றி கள்ளக் குறிச்சி, சின்னசேலம், சங்கரா புரம், ரிஷிவந்தியம், தியாகதுரு கம் பகுதியில் பல கிராமங் க ளில் ஏரி, குளங்கள் நிரம்ப வில்லை. இனி உருவாகும் காற்றழுத்த தாழ்வு நிலையால் கனமழை கிடைத்து இவைகள் நிரம்பும் என்று விவசாயிகள் நம்பிக் கையுடன் எதிர்பார்க்கின்றனர்.

## சேலம் மாவட்ட ஏரிகளின் நீர்மட்டம் கிடுகிடு! பருவ மழை தீவிரத்தால் விவசாயிகள் மகிழ்ச்சி

சேலம் : வடகிழக்கு பருவமழையால், சேலம் மாவட்டத்தில், பெரும்பாலான ஏரிகள், குளங்களின் நீர் மட்டம் கணிசமாக உயர்ந்துள்ளது. விவசாய கிணறுகளும் நிரம்பி வருவதால், விவசாயிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளதால், தமிழகம் முழுவதும் கடந்த சில நாட்களாக, தொடர்ந்து மழை பெய்து வருகிறது. சேலம் மாவட்டத்தில், லேசான தூறல், கனமழை என்று திடீர், திடீரென மழை பெய்து குளிர்வித்து வருகிறது. சேலம் மாவட்டத்தில் பெய்த தொடர் மழை காரணமாக, ஏரிகள், குளங்கள், குட்டைகள், கிணறுகள் உள்ளிட்ட நீர்நிலை ஆதாரங்கள் தொடர்ந்து நிரம்பி வருகிறது.சேலம் மாவட்டத்தில்,

385 ஊராட்சிகள் உள்ளது. ஊராட்சிகளின் கட்டுப்பாட்டில், 259 ஏரிகள் உள்ளது. வீரபாண்டி ஊராட்சிக்குட்பட்ட எஸ்.பாப்பாரப்பட்டி ஏரி, 100 சதவீதம் நிறைந்துள்ளது. ஓமலூர் சின்னேரி, 75 சதவீதம், நங்கவள்ளி கட்டநாயக்கன்பட்டி ஏரி, 75 சதவீதம், ஏற்காடு பெரிய ஏரி, அலங்கார ஏரி ஆகியவை, 75 சதவீதம் நிறைந்துள்ளது.பேரூராட்சிகள், 33 உள்ளது. பேரூராட்சிகளில், ஏழு ஏரிகள் உள்ளது. இவை அனைத்திலும், நீரின் அளவு, 50 சதவீதத்தை எட்டியுள்ளது. ஐந்து குளங்கள் உள்ளது. அனைத்தும், 75 சதவீதம் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. குட்டைகள், மூன்று உள்ளது. நீர்மட்டம், 50 சதவீதம் உயர்ந்துள்ளது. பொதுப்பணித் துறையின் கட்டுப்பாட்டில், மேட்டூர் டிவிஷனில், 18 ஏரிகள் உள்ளது. இதில் கொளத்தூர் தும்மல் காட்டுப்பள்ளம் ஏரி, 100 சதவீதம் நிரம்பியுள்ளது. ஐந்து ஏரிகள், 75 சதவீதம் நிறைந்துள்ளது. மேலும், 12 ஏரிகள், 50 சதவீதம் நிறைந்துள்ளது.சேலம் மாவட்டத்தில் பொதுப்பணித்துறையின் (சரபங்கா பிரிவு) கட்டுப்பாட்டில், சேலம், ஆத்தூர், வாழப்பாடி, கெங்கவல்லி, தலைவாசல் உள்ளிட்ட பகுதிகளில், 89 ஏரிகள் உள்ளது. இதில் கெங்கவல்லி ஜங்கம சமுத்திரம் ஏரி, 100 சதவீதம் நிறைந்துள்ளது. சேலம் பைரோசி ஏரி, 100 சதவீதம் நிறைந்துள்ளது. ஆத்தூர் புது ஏரி, 75 சதவீதமும், செந்தாரப்பட்டி ஏரி, 50 சதவீதமும் நிறைந்துள்ளது. மீதமுள்ள, 85 ஏரிகளில், 25 சதவீதத்துக்கு குறைவாகவும், 25 சதவீதத்தில் இருந்து, 40 சதவீதம் வரையிலும் நீர்மட்டம் உயர்ந்துள்ளது.கன்னங்குறிச்சி மூக்கனேரி, சின்னேரி, அழகாபுரம் இஸ்மாயின்கான் ஏரி ஆகியவற்றின் நீர்மட்டமும், 25 சதவீதத்துக்கு அதிகமாக உயர்ந்துள்ளது. கடந்த சில ஆண்டுகளாக, சேலம் மாவட்டம் முழுவதும் ஏரிகள், குளங்கள், கிணறுகள் உள்ளிட்ட நீர் நிலை ஆதாரங்கள் மழையின்றி வறட்சியாக காணப்பட்டது. இதனால், விவசாயிகள் கடும் பாதிப்புக்கு ஆளாகினர். இந்த ஆண்டு, வட கிழக்கு பருவ மழை, மாவட்ட மக்களுக்கும், விவசாயிகளுக்கும் கை கொடுக்கும் வகையில், தொடர்ந்து பெய்து வருவது, அனைத்து தரப்பினர் இடையேயும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.சமீபத்திய மழையால் அனைத்து நீர் நிலை ஆதாரங்களில், நீர்மட்டம் கிடு கிடுவென உயர்ந்து

வருகிறது. தொடர்ந்து மழை பெய்யும் பட்சத்தில், அனைத்து நீர்நிலைகளிலும் நீர்மட்டம், 100 சதவீதம் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஆரியூர் கிராம பஞ்சாயத்தில் பண்ணை மகளிர் குழு துவக்கம்

மோகனூர் : ஆரியூர் பஞ்சாயத்தில் பண்ணை மகளிர் குழு துவக்க விழா நடந்தது. சட்டசபையில், 110வது விதியின் கீழ், அறிவிக்கப்பட்ட அம்மா பண்ணை மகளிர் திறன் மேம்பாட்டுத் திட்டம், 2014-15 துவக்க விழா, மோகனூர் யூனியன், ஆரியூர் பஞ்சாயத்துக்கு உட்பட்ட, நெய்க்காரன் பட்டியில் நடந்தது.இத்திட்டத்தின் கீழ், பண்ணை மகளிர் குழுக்கள் இணைந்து வேளாண் சார்ந்த தொழில் துவங்கி ஆலோசனை வழங்குதல், பயிர் சாகுபடி மற்றும் பண்ணை மேலாண்மைக்கான தொழில் நுட்ப உதவிகள் அளித்தல், வேளாண் மற்றும் சகோதரத் துறைகள் மூலம் விவசாயம் சார்ந்த தொழிலில் ஈடுபட்டு வருவாய் பெருக்கலாம்.துவக்க விழாவுக்கு, யூனியன் சேர்மன் சிவசாமி தலைமை வகித்தார். பி.ஏ.சி.பி., தலைவர் மணி, யூனியன் கவுன்சிலர் மணி பழனியப்பன், முன்னாள் பஞ்சாயத்து தலைவர் ராஜாகண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வட்டார வேளாண் உதவி இயக்குனர் கந்தசாமி, வேளாண் அலுவலர் ஹேமலதா ஆகியோர் குழுவின் செயல்பாடுகள் குறித்து பேசினர்.அம்மா பண்ணை மகளிர் குழுவை, ஒருவந்தூர் பஞ்சாயத்து தலைவர் ராஜாமணி, பி.ஏ.சி.பி., தலைவர் பாலசுப்ரமணியன் ஆகியோர் துவக்கி வைத்தனர். இதற்கான ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் மோகன்ராஜ், சந்திரசேகரன் உள்ளிட்டோர் செய்திருந்தனர்

## நாமகிரிபேட்டையில் ரூ. 32 லட்சம் மஞ்சள் ஏலம்

ராசிபுரம் : நாமகிரிப்பேட்டை வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று, 32 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் ஏலம் நடந்தது. நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில், மஞ்சள் ஏலம் நடந்தது. தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட, நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் சேலம் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள விவசாயிகள் தங்கள் மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.நேற்று, நடந்த ஏலத்தில், 65 கிலோ கொண்ட, 595 மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. விரலி ரகம்,

குவிண்டாலுக்கு அதிக பட்சம், 8,384க்கும், குறைந்த பட்சம், 5,849 ரூபாய்க்கும் ஏலம் போனது. உருண்டை ரகம் மஞ்சள், அதிக பட்சம், மூட்டை 6,569க்கும், குறைந்த பட்சம், 6,016 ரூபாய்க்கும் ஏலம்போனது. பனங்காலி ரகம், அதிக பட்சம், 12 ஆயிரத்து, 900க்கும், குறைந்த பட்சம், 12 ஆயிரத்து, 100 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, நேற்று மட்டும், ஒரே நாளில், 32 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் விற்பனையானது.

<u>**சோளம் விளைச்சல் அமோகம்: விலை உயர்வால் மகிழ்ச்சி**</u>

கிருஷ்ணகிரி : மானாவாரி நிலங்களில், விதைக்கப்பட்ட சோளம் நன்றாக விளைந்துள்ளதாலும், கடந்தாண்டை காட்டிலும் இந்தாண்டு விலை கூடியுள்ளதாலும், சோளம் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில், நெல் 23 ஆயிரத்து 700 ஹெக்டரிலும், எண்ணைய் வித்து பயிர்கள், 20 ஆயிரம் ஹெக்டரிலும், சிறு தானியபயிர்கள், 73 ஆயிரம் ஹெக்டரிலும், பயிறு வகை பயிர்கள், 55 ஆயிரம் ஹெக்டரிலும் சாகுபடி செய்யப்படுகிறது. இதில், சிறுதானிய பயிர்களில் கேழ்வரகு, 57 ஆயிரம் ஹெக்டரிலும், சோளம், 8,000 ஹெக்டரிலும் சாகுபடி செய்யப்படுகிறது.கிருஷ்ணகிரி, வேப்பனப்பள்ளி, பர்கூர், போச்சம்பள்ளி, கல்லாவி, ராயக்கோட்டை, மத்தூர், ஊத்தங்கரை ஆகிய பகுதிகளில் சோளம் மானாவாரி பயிராக பரவலாக பயிர் செய்யப்படுகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இந்தாண்டு ஜூன் மாதத்தில் பெய்த மழையின் போது, விவசாயிகள் சோளத்தை விதைத்தனர். தற்போது சோளப்பயிர் செழுமையாக வளர்ந்து அறுவடைக்கு தயாராக உள்ளது. வேட்டியம்பட்டி விவசாயிகள் கூறியதாவது: வேட்டியம்பட்டி பகுதியில் "தலைவிரிச்சான்' எனப்படும் நாட்டு ரகத்தை விவசாயிகள் அதிக பரப்பில் சாகுபடி செய்துள்ளனர். மருத்துவ குணம் வாய்ந்த சோளம் அரிசிக்கு மாற்று உணவாக கிராமங்களில் பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், சோளம் பல்வேறு ஊட்டச்சத்து பவுடர்களில் கலக்கப்படுகிறது. இதனால், தற்போது அறுவடை செய்யும் சோளத்தை விவசாயிகள் அந்தந்த பகுதியில் நடக்கும் சந்தைகளில், ஒரு கிலோ சோளத்தை, 15 ரூபாய்க்கு விற்பனை செய்கின்றனர். கடந்தாண்டு, ஒரு கிலோ, 10 ரூபாய்க்கு விற்பனையானது. விலை ஏற்றத்தால், ஒரு ஏக்கரில், 1,000 கிலோ வரை

சோளம் விளைச்சலை கொடுக்கும் என்பதால், ஏக்கருக்கு, 10 ஆயிரம் ரூபாய் வரை லாபம் கிடைக்கும் என, எதிர்பார்க்கிறோம்.இவ்வாறு அவர்கள் கூறினர்.

**<u>அம்மா பண்ணை குழுக்கள் துவக்கம்</u>**

ஈரோடு : விவசாய பெண்களை, தொழில் முனைவோராக்கும், பண்ணைக்குழு திட்டத்தில், ஈரோடு மாவட்டத்தில், வேளாண் துறையில், 21 குழு, தோட்டக்கலைத்துறை மூலம், 18 குழுக்கள் என, 33 குழுக்கள் துவங்க, நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. விவசாயத்துறையில் பெண்களை நடவு செய்தல், அறுவடை பணிகளுக்காக மட்டுமே பயன்படுத்தப்படுவர். இம்முறையை மாற்றி, அவர்களையும் தொழில் முனைவோராக மாற்றும் வகையில், தமிழக அரசு அம்மா பண்ணைக்குழு திட்டத்தை அறிவித்துள்ளது. மாநிலம் முழுவதும், 770 பண்ணைக்குழுக்கள் துவக்கப்பட உள்ளது.ஈரோடு மாவட்டத்தில், வேளாண் இணை இயக்குனர் செல்வராஜ், உதவி இயக்குனர் கார்த்திகேயன் ஆகியோர், சத்தியமங்கலத்தில், சிக்கரசம்பாளையம், உக்கரம் பகுதிகளிலும், சுங்கக்காரன்பாளையம், தொப்பம்பாளையம் மற்றும் கதிரம்பட்டி உள்ளிட்ட பகுதிகளிலும் பண்ணை மகளிர்குழுக்களை, நவ., 1ல், துவக்கி வைத்தனர்.இத்திட்டத்தின் கீழ், ஒரு குழுவில், 20 பெண்கள் உறுப்பினர்களாக சேர வேண்டும். திருமணமான பெண்களாகவும், எழுத, படிக்க தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். ஒவ்வொரு குழுவுக்கும் சுழல் நிதியாக தலா, பத்தாயிரம் முதற்கட்டமாக வழங்கப்படும்.மகளிர் குழுக்களை போன்று, இப்பண்ணை மகளிர் குழுவினரும், காளான் வளர்ப்பு, ஊறுகாய் தயாரித்தல், விதைகள் உற்பத்தி, மண்புழு உரம் தயாரித்தல், மகரந்த தாள் உற்பத்தி என பலதொழில்களில் ஈடுபட்டு, தொழில் முனைவோராக உருவாகும் வாய்ப்பு, ஏற்படுத்தப்பட்டுள்ளதாக, வேளாண் இணை இயக்குனர், செல்வராஜ் தெரிவித்தார்.

**<u>வேளாண் கருவி செய்து விற்பனை: பீஹார் மாநிலத்தவர்கள் மும்முரம்</u>**

சென்னிமலை : சென்னிமலை குமரன் சிலை அருகே, மூன்று குடும்பத்தை சேர்ந்த, பீஹார் மாநிலத்தவர்கள் முகாமிட்டு, வேளாண் கருவிகளை செய்து விற்பனை செய்து வருகின்றனர். இரும்புகளை உருக்கி, தொழில் செய்வதில் எப்போதும் திறமைசாலிகளாக செயல்படுபவர்கள், பீஹார்

மாநிலத்தை சேர்ந்தவர்கள். தமிழகம் உட்பட இந்தியாவில் செயல்படும் இரும்பு தொழில்சாலைகளில், அதிக அளவில் அம்மாநிலத்தை சேர்ந்தவர்கள் பணி புரிவர்.இரும்பை வளைப்பது, கருவியின் தன்மைக்கு ஏற்ப மாற்றுவது போன்ற வேலைகளை, அவர்கள் திறம்பட செய்து வருகின்றனர்.இதுபோன்ற சில குடும்பத்தினர், பீஹாரில் இருந்து, ஈரோடு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் முகாமிட்டுள்ளனர். இதில், மூன்று குடும்பத்தை சேர்ந்த, 25க்கும் மேற்பட்டவர்கள், சென்னிமலையில் முகாமிட்டுள்ளனர்.கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக, ஆண், பெண், குழந்தைகள் என, அனைவரும், அந்தந்த இடங்களிலேயே, இரும்பை தகடாக்கி, விவசாயம் மற்றும் அதை சார்ந்த பணிகளுக்கு தேவையான வகையில், அரிவாள், கொத்து, கருக்காருவாள், கோடாரி, சம்மட்டி, மண்வெட்டி, தவிர, வீட்டு உபயோகத்துக்கான இரும்பு பொருட்களை, நாம் கேட்டும் வகையில் அமைத்து தருகின்றனர்.கையால், மிக எளிமையான முறையில், குறைந்த விலையில் செய்து கொடுப்பதால், இவற்றை வேடிக்கை பார்க்கவும், வாங்கவும் எப்போதும் கூட்டம் கூடுகின்றனர்.தவிர, பழைய வேளாண் பொருட்களை, அவர்களிடம் வழங்கினால், அவற்றை சீரமைத்தும் வழங்கி வருகின்றனர். தினமும், ஒரே இடத்தில் அமர்ந்து, 400 முதல், 1,000 ரூபாய் வரை விற்பனை செய்து வருகின்றனர்.

## <u>நிரம்பும் நிலையில் கெட்டிசமுத்திரம் ஏரி</u>

அந்தியூர் : அந்தியூர் மற்றும் பர்கூர் பகுதியில் பெய்த தொடர் மழையால், கடந்த வாரம் வரட்டுப்பள்ளம் அணை மற்றும் எண்ணமங்களம் ஏரி ஆகிய இரண்டும் நிரம்பியது. இதனை அடுத்து, வரட்டுப்பள்ளம் அணை, எண்ணமங்கலம் ஏரியில் இருந்து அந்தியூர் கெட்டிசமுத்திரம் ஏரிக்கு நீர் வரத்து தொடர்ந்து கொண்டே இருப்பதால், தற்போது இந்த ஏரி நிரம்பும் நிலையில் உள்ளது.இதனால், புதுப்பாளையம், கிருஷ்ணாபுரம், ஜெ.ஜெ.நகர் உள்ளிட்ட ஏரியும், இதை சார்ந்த பகுதியில் உள்ள கிணறு உள்ளிட்ட நீர் நிலைகளில், நீர் மட்டம் உயர்ந்துள்ளது.குடிநீருக்கு ஆதாரமாக திகழும், ஆழ்துளைக்கிணறுகளின் நீர்மட்டமும் உயர்ந்துள்ளதால், பொதுமக்களும், விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## காய்கறி உற்பத்திக்கான மருந்துகளை மானிய விலையில் வழங்கினால் பயன்

கூடலூர் : "கூடலூர் பகுதியில் காய்கறி உற்பத்திக்கு தேவையான மருந்துகள், உரங்களை அரசு மானிய விலையில் தாமதமின்றி வழங்க வேண்டும்' என, வலியுறுத்தப்பட்டுள்ளது. கூடலூர் பகுதியில் கோடை காலத்தில், பாகற்காய், பஜ்ஜி மிளகாய் உள்ளிட்ட காய்கறிகள் அதிகளவில் பயிரிட்டு வருகிறது. இங்கு உற்பத்தியாகும் பஜ்ஜி மிளகாய்க்கு தமிழகத்திலும், பாகற்காய், பூசனிகாய் உள்ளிட்ட காய்கறிகளுக்கு கேரளாவிலும் அதிக தேவை உள்ளது. தற்போது, பருவமழை குறைந்துள்ளதால் விவசாயிகள் பாகற்காய், பஜ்ஜி மிளகாய், பீன்ஸ் உள்ளிட்ட காய்கறிகளை பயிரிட துவங்கியுள்ளனர்.இங்கு விளையும் பஜ்ஜி பாகற்காய், பூசனி உள்ளிட்ட காய்கறிகள் கொள்முதல் செய்ய வசதியாக வியாபாரிகள் சிலர், விவசாயிகளுக்கு பண உதவிகளை செய்து வருகின்றனர். சிறு விவசாயிகள் கூறுகையில், "தற்போது விவசாய பணியாளர்களின் சம்பள உயர்வு; ரசாயன உரங்கள் விலை உயர்வு; தண்ணீர் பற்றாக்குறை போன்ற காரணங்களால் எதிர்பார்த்த வருவாய் கிடைப்பதில்லை. அரசு மானிய விலையில் தேவையான மருந்துகள், உரங்களை தாமதமின்றி வழங்க வேண்டும்' என்றனர்.

## தொடர் மழை, பனிப்பொழிவால் செம்மறி ஆடுகளை நீலநாக்கு நோய் தாக்கும் அபாயம்

கரூர் : கரூர் மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருவதாலும், பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளதால், செம்மறி ஆடுகளை நீலநாக்கு நோய் தாக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. கரூர் மாவட்டத்தில், கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. மழையின் காரணமாக காவிரி, அமராவதி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. மழையின் தாக்கம் குறைந்ததால், இரவு நேரத்தில் கடுமையான பனிப்பொழிவு ஏற்படுகிறது. பனியின் காரணமாக கால்நடைகளை நீலநாக்கு நோய் தாக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. கரூர் மாவட்டத்தில் க.பரமத்தி, அரவக்குறிச்சி, நொய்யல், வேலாயுதம்பாளையம், குளித்தலை உள்ளிட்ட பகுதியில் அதிகளவில் செம்மறியாடுகள் வளர்க்கப்படுகிறது.பனியின் காரணமாக, செம்மறியாடுகளை இந்நோய் அதிகம் தாக்கும் என்பதால்,

நோய் தடுக்கும் வழிமுறை குறித்து, கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மைய தலைவர் அகிலா தெரிவித்துள்ளதாவது:செம்மறியாடுகளை நீலநாக்கு நோய் அதிக அளவில் தாக்கி, பொருளாதார இழப்பை ஏற்படுத்துகிறது. கரூர் மாவட்டத்தில், அதிகமாக மழை பொழிவு இருப்பதால், இனி வரும் மார்கழி மற்றும் தை மாதங்களில், அதிகமாக நோய் காணப்பட வாய்ப்பு உள்ளது. நோய் கூலிகாய்டஸ் என்ற சிறு ஈக்கள் கடிக்கும்போது, நோயுற்ற ஆட்டிலிருந்து வைரஸ் கிருமி மற்ற ஆடுகளுக்கு பரவுகிறது. நோய் கிருமிகள் ஈ மற்றும் இதர ஒட்டுண்ணிகளாலும் பரப்பப்படுகிறது. நோய் கண்ட செம்மறியாடுகளில் அதிக காய்ச்சல், மூக்கில் சளி வருதல், வாய் உதடுகள் ஈறுகள் மற்றும் நாக்கு ஆகிய இடங்களில் புண் உண்டாதல் போன்றவை காணப்படும். அதிக ரத்த ஓட்டம் காரணமாக, நாக்கு சிவப்பு நிறத்துடன் காணப்படும். பாதிக்கப்பட்ட ஆடுகளின் கால் குளம்புகளும், தோலும் சேருமிடத்தில் வீக்கம் ஏற்பட்டு கால் நொண்டுதல் ஏற்படும். நோய் கழுத்து தசைகளையும் பாதிப்பதால், கழுத்து ஒரு பக்கமாக சாய்ந்து காணப்படும். சிற செம்மறியாடுகளில் கழிச்சல், கால் குளம்புகளுக்கு இடையே உள்ள புண்களில் மற்றும் முடி கொத்து கொத்தாக கொட்டுதல் ஆகியவை காணப்படும். நோயின் தாக்கம் பெய்யும் மழையளவு, ஈரப்பதம் மற்றும் நச்சுயிரிகளை பரப்பும் கொசுக்களின் எண்ணிக்கைய பொறுத்து மாறுபடுகிறது. நோய் பரவ காரணமாக உள்ள ஈ, கொசு போன்றவை பெருகாமல் இருக்க மழை அதிகமான இக்காலங்களில் நீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நோய் பரப்பும், கூலிகாய்டஸ் ஈக்கள் மாலை, 6 மணி முதல், 8 மணி வரை அதிகமாக ஆடுகளை கடிப்பதால், இந்நேரங்களில் ஆட்டுப்பட்டிகளில் வேப்ப இலை மற்றும் தும்பை இலை புகைமூட்டம் போட வேண்டும். ஈக்கள் உற்பத்தியாகும் இடங்களில் பூச்சிக்கொல்லி மருந்தினை தெளிப்பதன் மூலம் நோய் பரவுவதை தடுக்கலாம். பருவமழை துவங்கும் முன் நோய் தாக்கம் உள்ள பகுதிகளில், நோயினை தடுக்க தடுப்பூசி போடுவது சிறந்தது.நோய் கண்ட ஆடுகளுக்கு சிறிதளவு அரிசி, கம்பு, கேழ்வரகு ஆகியவற்றில் கஞ்சி காய்ச்சி கொடுக்க வேண்டும். மேய்ச்சலுக்கு விடக்கூடாது. வாயில் உள்ள புண்களுக்கு உப்பு தண்ணீர் அல்லது ஒர கிராம் பொட்டாசியம் பரர்மாங்கனேட் கலந்த நீரில், ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று

முறை கழுவ வேண்டும். புண்களுக்கு கிளிசரின் அல்லது விலங்கு நெய் தடவலாம்.ஆடு வளர்க்கும் விவசாயிகள், அருகில் உள்ள கால்நடை மருந்தகங்கள் மற்றும் பண்டுதகாரன்புதூரில் அமைந்துள்ள கால்நடை டமருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தை தொடர்பு கொண்டு, நோய் கட்டுப்படுத்தும் முறைகளை தெரிந்து கொள்ளலாம்.இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## தஞ்சாவூரில் 5.20 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல்: மண்டல மேலாளர் தகவல்

தஞ்சாவூர் : தஞ்சாவூர் மாவட்டத்தில், இந்த ஆண்டு,(2014-15) குறுவை, சம்பா மற்றும் தாளடி பருவத்தில், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம், 5.20 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்வதென, தமிழ்நாடு நுகர்ப்பொருள் வாணிபக் கழகம் இலக்கு நிர்ணயித்துள்ளது. இது குறித்து, அதன் மண்டல மேலாளர் முகம்மது பாதுஷா வெளியிட்டுள்ள அறிக்கை: தஞ்சாவூர் மாவட்டத்தில், ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் முதல் செப்டம்பர் வரை நெல் கொள்முதல் செய்யப்படும். கடந்த ஆண்டு பருவமழை பெய்யத் தவறியதாலும், தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டதாலும், மாவட்டத்தில் நெல் சாகுபடி வெகுவாக பாதிக்கப்பட்டது. இருப்பினும் குறுவை, சம்பா மற்றும் தாளடி பருவத்தில் விதை நெல் மற்றும் வெளிச்சந்தைகளில் விற்பனை செய்தது போக, நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் விவசாயி களிடமிருந்து, மூன்று லட்சத்து, 1,932 மெடக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. இதற்காக, ஏ கிரேடு ரக நெல் டன் ஒன்றுக்கு ஊக்கத்தொகை உட்பட, 1,470 ரூபாய் வீதமும், இதர ரக நெல் டன் ஒன்றுக்கு, 1,450 வீதமும் கணக்கிட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை பொய்த்துவிட்ட நிலையில், வடகிழக்கு பருவமழை தொடர்ந்து பெய்து வருவதாலும், காவிரியில் இருந்து கல்லணை, வெண்ணாறு மற்றும் கொள்ளிடத்தில் தண்ணீர் திறந்துவிடபட்டுள்ளதாலும், மாவட்டம் முழுவதும் சம்பா நெல் சாகுபடி அதிகரித்துள்ளது. இதன் காரணமாக, இந்த ஆண்டு குறுவை, சம்பா மற்றும் தாளடி பருவத்தில், விவசாயிகளிடமிருந்து, ஐந்து லட்சத்து, 20 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்வதென இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. குறுவை நெல் சாகுபடி செய்யப்பட்ட

விவசாயிகளிடமிருந்து கடந்த அக்டோபர் முடிய, 103 நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம், 450 மெட்ரிக் டன் மட்டுமே நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. நெல் வரத்து குறைந்ததால், 48 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. மீதமுள்ள, 55 நெல் கொள்முதல் நிலையங்கள் தொடர்ந்து இயங்கிவருகிறது. சம்பா மற்றும் தாளடி பருவத்துக்கான அறுவடை துவங்கும் போது, தேவைக்கேற்ப கூடுதல் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கவும், தமிழ்நாடு நுகர்ப்பொருள் வாணிபக் கழகம் தயாராக உள்ளது. கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கு உரிய ஆதார விலையினை விவசாயிகளிடம் உடனுக்குடன் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

**<u>தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தில் சேர அழைப்பு</u>**

தஞ்சாவூர் : தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தின் கீழ் பயன்பெற வருமாறு, தஞ்சை மாவட்ட வேளாண் இணை இயக்குனர் சேகர் அழைப்பு விடுத்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: தஞ்சாவூர் மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் வடகிழக்கு பருவ மழையை தொடர்ந்து, நெல் சாகுபடியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். நடப்பு ஆண்டில், சம்பா மற்றும் தாளடி நெற்பயிருக்கான மத்திய, மாநில அரசுகளின் பயிர் காப்பீட்டு திட்டத்தை தேசிய வேளாண் காப்பீடு நிறுவனம் அமல்படுத்தியுள்ளது. இத்திட்டத்தில், பயன்பெற பயிர் கடன் பெறாமல் சம்பா மற்றும் தாளடி நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் நவம்பர், 15ம் தேதிக்குள் உறுப்பினராக சேரவேண்டும். சிறு மற்றும் குறு விவசாயிகள், ஏக்கர் ஒன்றுக்கு மானியம் போக, 115 ரூபாய் 20 காசு வீதமும், இதர விவசாயிகள் ஏக்கருக்கு, 128 ரூபாய் வீதமும் பிரிமியத் தொகை செலுத்தவேண்டும். மொத்த காப்பீட்டு மதிப்பு ஏக்கருக்கு, 12 ஆயிரத்து, 800 ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கூடுதல் மதிப்பீடாக ஏக்கர் ஒன்றுக்கு, 11 ஆயிரத்து, 200 ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கு கடன் பெறாத விவசாயிகள், மானியம் இன்றி ஏக்கர் ஒன்றுக்கு, 2,688 ரூபாய் வீதம் பிரிமியத் தொகை செலுத்த வேண்டும். நிலத்துக்குண்டான சிட்டா, அடங்கல் அல்லது வி.ஏ.ஓ., சான்றிதழ் பெற்று முன்மொழிவு படிவத்துடன் பிரிமியம் செலுத்த

வேண்டும். இதற்கான முன்மொழிவு படிவங்கள் அருகில் உள்ள வேளாண்மைத்துறை அலுவலகங்கள், வங்கிகள் மற்றும் கூட்டுறவு சங்கங்களில் வழங்கப்படுகிறது.இயற்கை இடர்பாடுகள், பூச்சி தாக்குதல்கள் மற்றும் நோயினால் ஏற்படும் மகசூல் இழப்பை ஈடுசெய்யும் விதமாக தேசிய வேளாண் பயிர் காப்பீட்டு திட்டத்தில், விவசாயிகள் அனைவரும் இணைய வேண்டும்.இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

**ஆறு, வாய்க்கால் தூர்வார ரூ.1,560 கோடி ஒதுக்கீடு**

திருத்துறைப்பூண்டி : திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தாலுகா முத்துப்பேட்டை பகுதியில் பெய்த தொடர் மழை காரணமாக, 25 ஆயிரம் ஏக்கர் சம்பா பயிர்களை நீர் சூழ்ந்துள்ளது. நீர் வடிந்த நிலையில், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வேளாண்மை துறை சார்பில், யூரியா உரம் மற்றும் நுண்சத்துக்கள் வழங்கும் நிகழ்ச்சி, மாவட்ட கலெக்டர் மதிவாணன் தலைமையில் நடந்தது.இதில், நாகை எம்.பி., கோபால், எம்.எல்.ஏ., உலகநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண் இணை இயக்குனர் மயில்வாகணன் வரவேற்று பேசினார். விவசாயிகளுக்கு இடு பொருட்களை வழங்கி அமைச்சர் காமராஜ் பேசியதாவது: பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இலவசமாக இடுபொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. ஆசிய வங்கி உதவியுடன், 1,560 கோடி மதிப்பீட்டில் ஆறு, வாய்க்கால்கள் தூர்வாரப்பட உள்ளது.

**மகிழ்ச்சி ! : பெரியாறு அணை நீர்மட்டம் உயர்வால் விவசாயிகள்.. : இரண்டாம் போக நெல் நடவு பணி தீவிரம்**

கூடலூர்: பெரியாறு அணையில் நீர் இருப்பு அதிகமாக உள்ளதால், இரண்டாம் போக நெல் விவசாயத்திற்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்படாது என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.கூடலூர் அருகே இரண்டாம் போக நெல் நடவு பணிகளை துவக்கியுள்ளனர். பெரியாறு அணை நீரை நம்பி கம்பம் பள்ளத்தாக்கில் 14 ஆயிரத்து 707 ஏக்கர் பரப்பளவில் இரு போக நெல் சாகுபடி உள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளாக தண்ணீர் பற்றாக்குறை காரணமாக இரு போக நெல் சாகுபடியைமுழுமையாக எடுக்க முடியாமல் விவசாயிகள் சிரமத்திற்கு உள்ளாகினர். இந்நிலையில் பெரியாறு அணையில் நீர்மட்டம் 142

அடியாக உயர்த்திக் கொள்ளலாம் என்ற சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக்குப்பின், அணையின் நீர்மட்டம் நேற்று காலை நிலவரப்படி 138 அடியை எட்டியுள்ளது.136 அடிக்கு மேல் உள்ள தண்ணீர் கேரள பகுதிக்கு செல்லாமல் அணையிலேயே தேங்கி இருப்பதால்,இரண்டாம் போக நெல் சாகுபடிக்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்பில்லை. விவசாயிகள் மும்முரம்: கம்பம் பள்ளத்தாக்கில் பல பகுதிகளில் முதல் போக நெல் அறுவடை மும்முரமாகியுள்ளது. கூடலூர் அருகே உள்ள ஆங்கூர்பாளையம், சாமாண்டிபுரம் பகுதிகளில் நெல் அறுவடை முடிந்து, தற்போது இரண்டாம் போகத்திற்கான நெல் நடவு பணிகள் துவங்கியுள்ளன. விவசாயிகள் கூறுகையில்,""கடந்த ஆண்டு மழையின்றி இரண்டாம் போக நெல் சாகுபடியை முழுமையாக எடுக்க முடியவில்லை. அதனால் இந்த ஆண்டு முதல் போக நெல் சாகுபடியை முன்கூட்டியை நடவு செய்தோம்.அதனால் தற்போது அறுவடை முடிந்து இரண்டாம் போகத்திற்கான நடவு பணிகளை துவக்கியுள்ளோம்.கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் அனைத்து விவசாயிகளும், முதல் போக நெல் சாகுபடியை முன் கூட்டியே செய்தால் இரண்டாம் போகத்திற்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்பில்லை'' என்றனர்.

## "மா' ஒட்டு ரகம் விற்பனை அமோகம்

பெரியகுளம்: பெரியகுளம் அரசு தோட்டக்கலைப் பண்ணையில் "மா ரகங்களின் தங்கம்' என அழைக்கப்படும் "அல்போன்சா' மா ஒட்டு ரகம் விற்பனை களை கட்டியுள்ளது. பெரியகுளம் பகுதியில் பரவலாக மழை பெய்துள்ள நிலையில், பழக்கன்றுகள் மற்றும் மரக்கன்றுகள் விற்பனை அதிகரித்துள்ளது.பெரியகுளத்தில் இருந்து 4 கி.மீ., தூரத்தில், அரசு தோட்டக்கலைப்பண்ணை உள்ளது.விவ சாயிகளுக்கு தேவையான 19 வகையான கன்றுகள் இங்கு இருப்பில் உள்ளன. தோட்டக்கலைத் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மூலமாகவும் வினியோம் செய்யப்படுவதாக தோட்டக் கலைப்பண்ணை நிர்வாகம் தெரிவித் துள்ளது. மா நெருக்கு ஒட்டு ரகமான "மா ரகங்களின் தங்கம்' என்றழைக்கப்படும் அல்போன்சா, பங்கனபள்ளி, இமாம்பசன்ட் மற்றும் கல்லாமை, காசா கன்று ஒன்று 50 ரூபாயாகவும், மா மென்தண்டு ஒட்டு

செடிகளான அல்போன்சா, பங்கனபள்ளி, இமாம்பசன்ட், காசா, செந்தூரம், ருமானி கன்று ஒன்று 36 ரூபாயாகவும், பெருநெல்லி ஒட்டு ரகம் 25 ரூபாயாகவும் விற்கப்படுகிறது.சப்போட்டா ஒட்டு, மாதுளை பதியன், எலுமிச்சை, பப்பாளி, வீரிய பப்பாளி நாற்றுகள், புளி ஒட்டு, பலா ஒட்டு, விதையில்லாத நாவல் ஒட்டு, சவுக்கு,இலவம்,தேக்கு, கறிவேப்பிலை, மல்லிகை, வேப்பம், புங்கன் கன்றுகள் மற்றும் அலங்கார செடி வகைகளும் விற்பனைக்கு தயாராகஉள்ளது. 5 ரூபாயிலிருந்து 50 ரூபாய் வரையிலும் கன்றுகள் விற்கப்படுவதாக தோட்டக்கலை அலுவலர் ஆறுமுகம் தெரிவித்துள்ளார்.

**முந்திரி, கோகோ சாகுபடி பயிற்சி**

கிருப்புக்கார்: கிருப்புக்கார் அருகே குன்றக்குடி வேளாண் அறிவியல் நிலையத்தில் முந்திரி மற்றும் கோகோ மேம்பாடு இயக்குநரகம் நிதி உதவியுடன் விவசாயிகளுக்கு முந்திரி,கோகோ சாகுபடி பயிற்சி அளிக்கப்பட்டது. கால்நடைப் பல்கலை விரிவாக்க கல்வி இயக்குநர் சந்திரகாசன் தலைமையேற்று துவக்கி வைத்தார். தோட்டக்கலை துணை இயக்குநர் பாலமுருகன் முன்னிலை வகித்தார். அறிவியல் நிலைய தலைவர் விஜயராஜன் வரவேற்றார். கிருவண்ணாமலை ஆதினம் குன்றக்குடி பொன்னம்பல அடிகள் பயிற்சி கையேட்டினை வெளியிட்டார். புதிய உயர் தொழில்நுட்பங்களான நடவுமுறைகள், கவாத்து, உரம் மற்றும் நீர் மேலாண்மை, அறுவடை, பூச்சி,நோய் மேலாண்மை, அறுவடை பின் தொழில்நுட்பம் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய தோட்டக்கலை பேராசிரியர்கள் ஆனந்தன்,ராமர் இணைப்பேராசிரியர் செந்தூர்குமரன் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

**ராஜகம்பீரத்தில் வாரச்சந்தை**

மானாமதுரை: ராஜகம்பீரத்தில் திடீரென வாரச்சந்தை தொடங்கப் பட்டுள்ளது. ராஜகம்பீரத்தைச் சுற்றிலும் புதூர், கிருங்காக்கோட்டை, தீத்தான்பேட்டை,கால்பிரவு உள்ளிட்ட பல்வேறு கிராமங்கள் உள்ளன.இக்கிராம மக்கள் அனைவரும் மானாமதுரை அல்லது

முத்தனேந்தல் வாரச்சந்தையில் காய்கறி வாங்கி வந்தனர்.மக்கள் அதிகம் கூடும் ராஜகம்பீரத்தில் வாரச்சந்தை தொடங்க வேண்டும் என ஊராட்சி சார்பில் கடந்த 2012ம் ஆண்டு தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பட்டது. இந்நிலையில் நேற்று ராஜகம்பீரம் ஆர்.சி.தெருவில் 100க்கும் மேற்பட்ட கடைகளுடன் வாரச்சந்தை திடீரென ஆரம்பிக்கப்பட்டது. பி.டி.ஒ.சந்திரா,எஸ்.ஐ. முத்துகிருஷ்ணன் உள்ளிட்டோர் அனுமதி பெறாமல் சந்தை நடத்துவது தவறு என வியாபாரிகளிடம் தெரிவித்தனர். உரிய அனுமதி பெற்று பாதுகாப்பான இடத்தில் சந்தை நடத்த வேண்டும் என அதிகாரிகள் வியாரிகளிடம் வலியுறுத்தினர். ஊராட்சி தலைவர் ஆமினாள்ஷேக்முகமது கூறுகையில்: நாங்கள் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பி விட்டோம்.அரசு அனுமதி வழங்கவில்லை. ஆனால் வியாபாரிகள் அவர்களாகவே கடையை ஆரம்பித்து விட்டனர்.முத்தனேந்தலுக்கு காய்கறிகளை ஏற்றி செல்வது தொடர்பாக ஆட்டோ ஓட்டுனர்களுடன் அடிக்கடி மோதல் ஏற்படுகிறது. இதனை தவிர்க்க ராஜகம்பீரத்தில் சந்தை நடத்த அனுமதி வழங்க கோரி விரைவில் மீண்டும் தீர்மானம் நிறைவேற்றி அனுப்ப உள்ளோம், என்றார்.

## ராஜபாளையத்தில் 30 மி.மீ., மழை

விருதுநகர்: விருதுநகர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தொடர்கிறது. நேற்று காலை 8.30 மணிப்படி மழையளவு(மி.மீ.,): அருப்புக்கோட்டை 4, சாத்தூர் 1, சிவகாசி 8, விருதுநகர் 5.4, ராஜபாளையம் 30, பிளவக்கல் 11, காரியாபட்டி 19, வெம்பகோட்டை 9.2, கோவிலாறில் 8.2 மி.மீ., பதிவானது. மாவட்டத்தில் மழையால் உயர்ந்த அணை களின் நீர் மட்டம் விபரம்:

| அணை | நீர் பிடிப்பு(அடி) | நீர்இருப்பு |
|---|---|---|
| பெரியாறு | 43.4 | 42.87 |
| கோவிலாறு | 40.3 | 26.50 |
| வெம்பக்கோட்டை | 23.25 | 6.57 |
| கோல்வார்பட்டி | 17.05 | 4.65 |
| ஆனைக்குட்டம் | 23.25 | 19.22 |

| | | |
|---|---|---|
| குல்லூர்சந்தை | 7.59 | 3.41 |
| இருக்கன்குடி | 6.85 | |

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மாவட்டம் முழுவதும் மீண்டும் கனமழை

விழுப்புரம், : விழுப்புரம் மாவட்டத்தில் மீண்டும் கனமழை பெய்து வருகிறது. நேற்று பலத்த மழை பெய்ததால் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டது. தமிழகத்தில் கடந்த 10 நாட்களாக வடகிழக்கு பருவமழை பெய்து பல ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. விழுப்புரம் மாவட்டத்தில் தொடர் மழை காரணமாக 20 ஏரிகளில் 50 சதவீதம் தண்ணீர் நிரம்பியது. மேலும் பல இடங்களில் வீடுகள் இடிந்து விழுந்தது. பல இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, பொதுமக்கள் கடும் சிரமத்துக்கு உள்ளானார்கள். மழை சற்று ஓய்ந்திருந்த நேரத்தில் மீண்டும் மாவட்டத்தில் இரு தினங்களாக மழை பெய்துவருகிறது. புதிதாக உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு நிலைகாரணமாக மாவட்டத்தில் கடந்த இருதினங்களாக மழை பெய்துவருகிறது. நேற்று முன்தினம் முதல் இடைவிடாது மழை கொட்டியது. காலை சற்று நேரம் ஓய்வெடுத்த மழை மீண்டும் பிற்பகல் கொட்டி தீர்த்தது. இதனால் தாழ்வான இடங்களில் மழைநீர் சூழ்ந்து பல்வேறு இடங்களில் மழைநீர் தேங்கிநின்றது. விழுப்புரம் நகரில் கீழ்பெரும்பாக்கம் தரைப்பாலம், பெருந்திட்ட வளாகம், கமலா நகர் உள்ளிட்ட பகுதியில் மழைநீர் தேங்கிநின்று பொதுமக்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தியது. தொடர்மழை காரணமாக நேற்று பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டது.

### இந்திய தோட்டக் கலை கருத்தரங்கு நாளை துவக்கம்

கோவை, : தேசிய தோட்டக்கலை சங்கம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் இணைந்து நடத்தும் 6வது இந்திய தோட்டக்கலை

கருத்தரங்கு நாளை முதல் வரும் 9ம் தேதி வரை கொடிசியா வளாகத்தில் நடக்கிறது. இதில், தோட்டக்கலை பயிர் உற்பத்தி, உற்பத்தி திறன் மற்றும் தரம் போன்றவை குறித்து விவாதிக்கப் படவுள்ளது. இது குறித்து தேசிய தோட்டக்கலை சங்கம் தலைவர் சகா கூறியதாவது: இந்திய தோட்டக்கலை சங்கத்தினால் இரு வருடத்திற்கு ஒரு முறை தோட்டக்கலை குறித்த கருத்தரங்கு நடத்தப்படுகிறது. இந்த முறை கோவை கொடிசியாவில் நடத்தப்படவுள்ளது. இதில், உணவு, உடல் நலம் பாதுகாப்பில் தோட்டக்கலையின் பங்கு, தோட்டக்கலை பயிர்களின் உற்பத்தி, சிறு மற்றும் குறு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வழிமுறைகள் போன்ற தலைப்புகளின் கீழ் விவாதங்கள் நடக்கவுள்ளது. நான்கு நாட்கள் நடக்கும் கருத்தரங்கில் தோட்டக்கலை துறையின் தற்போதைய பிரச்சனை மற்றும் எதிர்கால சவால்களை எதிர்கொள்ளும் உத்திகள் பற்றியும் பேசப்படவுள்ளது. மேலும், 7ம் தேதி முதல் 9ம் தேதி வரை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், தமிழக அரசு தோட்டக்கலை துறை இணைந்து சர்வதேச தோட்டக்கலை கண்காட்சியை நடத்துகிறது. இதில், மலர்கள், காய்கறிகள், பழங்கள் மூலிகை மற்றும் நறுமணப்பயிர்கள் போன்றவை இடம்பெறவுள்ளது. இந்த கண்காட்சி மற்றும் கருத்தரங்கு விவசாயிகள் தொழில்நுட்பங்கள் குறித்து தெரிந்துகொள்ள ஏதுவாக இருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

## <u>மழையால் வரத்து அதிகரிப்பு ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தையில் தினசரி 75 டன் காய்கறி விற்பனை</u>

கோவை, : கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தையில் சராசரியாக தினசரி 75 டன் காய்கறி ரூ.15 லட்சத்திற்கு விற்பனையாகிறது. மழையால் காய்கறி வரத்து அதிகரித்துள்ளது. கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தைக்கு, தொண்டாமுத்தூர், பெரியநாயக்கன்பாளையம், மதுக்கரை, சர்க்கார் சாமக்குளம் மற்றும் நீலகிரி மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் 350 பேர் இங்கு காய்கறி விற்க அடையாள அட்டை பெற்றுள்ளனர். சராசரியாக தினசரி 75 டன் காய்கறி விற்கப்படுகிறது. தினசரி 8 ஆயிரம் முதல் 10 ஆயிரம் பேரும் விடுமுறை நாட்களில் 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் பேர் காய்கறி வாங்க வருகின்றனர். தினசரி சராசரியாக ரூ.15 லட்சம் மதிப்பிலான காய்கறி விற்பனையாகிறது. கடந்த வாரத்திற்கு

முன்பு வரை 10 நாட்களுக்கு மேலாக பெய்த மழையால் தற்போது காய்கறி வரத்து அதிகரித்துள்ளது. காய்கறி விலை நிலவரம்: உழவர் சந்தையில் நேற்று கத்தரிக்காய் கிலோ ரூ.20 முதல் 50 வரையும் மற்ற காய்கறிகள் ரூ.20 முதல் ரூ.32 வரையும், சின்ன வெங்காயம் ரூ.20 முதல் ரூ.38 வரையும், பெரிய வெங்காயம் ரூ.16 முதல் ரூ.26 வரையும் விற்றது. நாட்டு தக்காளி வரத்து அதிகரிப்பால் கடந்த 3 வாரத்திற்கு மேலாக ரூ.5 முதல் ரூ.10 வரையும், ஆப்பிள் தக்காளி ரூ.6 முதல் ரூ.12 வரையும் விற்கிறது. இது தவிர, காரட் ரூ.30 முதல் ரூ.46 வரையும், ஊட்டி உருளை கிழங்கு ரூ.20 முதல் ரூ.40க்கும், பீன்ஸ் ரூ.25 முதல் 66க்கும் விற்பனையானது.

**<u>திருச்சி மாவட்டத்தில் 38.10 மி.மீ மழை பதிவு</u>**

திருச்சி, : திருச்சி மாவட்டத்தில் மொத்தம் 38.10 மி.மீ மழை பதிவாகியுள்ளது. தமிழகத்தில் கடந்த 15 நாட்களுக்கு மேலாக பரவலாக மழை பெய்து வருகிறது. காவிரி மற்றும் பாலாறு நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த ஒரு வாரமாக பரவலாக மழை பெய்து வருவதாலும், டெல்டா பாசனத்திற்கு ஆதாரமான மேட்டூர் அணையின் நீர்மட்டம் கணிசமாக உயர்ந்து வருவதால் திருச்சி மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். தற்போது உள்ள தண்ணீரை கொண்டு சம்பா சாகுபடியில் விவசாயிகள் மும்முரமாக இறங்கியுள்ளனர். திருச்சி மாவட்டத்தில் நேற்று காலை 8 மணி வரையான நிலவரத்தில் லால்குடி, மணப்பாறை, புள்ளம்பாடி, தா.பேட்டை, துறையூர், மருங்காபுரி, பொன்னியாறுடேம், நவலூர் குட்டப்பட்டு, கல்லக்குடி, தேவிமங்கலம், சிறுகுடி, புலிவலம், குப்பம்பட்டி, கோவில்பட்டி, தென்பரநாடு, பொன்மலை உள்ளிட்ட பகுதிகளில் போதிய மழை பெய்யவில்லை. திருச்சி மாவட்டத்தில் மொத்தம் 38.10 மி.மீ மழை பதிவாகியுள்ளது. இதில் அதிகபட்சமாக முசிறியில் 10 மி.மீ மழை பெய்தது. திருச்சி ஜங்ஷனில் குறைந்த பட்சமாக 1 மி.மீ மழை பதிவானது. சராசரி 1.52 மி.மீ மழை பெய்துள்ளது. திருச்சி மாவட்டத்தில் நேற்று காலை 8மணி வரையிலான 24மணி நேரத்தில் பெய்த மழை அளவு(மி.மீ): திருச்சி விமான நிலையம், 1.50, திருச்சி டவுன் 2,40, நந்தியார் தலைப்பு 7.20, வாத்தலை அணைக்கட்டு 6,

சமயபுரம்5,துவாக்குடி5.

## திருவண்ணாலை மாவட்டத்தில் இலவச மாடுகள் வழங்க ரூ.75 லட்சம் ஒதுக்கீடு

திருவண்ணாமலை, : திருவண்ணாமலை மாவட்டத்தில் இலவச மாடுகள் வழங்க ரூ.75 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கால்நடைத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தமிழக அரசு கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் ஏழை, எளிய கிராமப்புற மக்களுக்கு இலவச கறவை மாடுகள் வழங்குகிறது. அதன்படி திருவண்ணாமலை மாவட்டத்தில் இலவச கறவை மாடுகள் வழங்க அரசு ரூ.75 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதற்காக மாவட்டத்தில் 250 பயனாளிகள் ஊராட்சி தலைவர், துணைத்தலைவர், கால்நடை மருத்துவர், விஏஓ உட்பட 7 பேர் கொண்ட குழுவினர் தகுதியான பயனாளிகளை தேர்வு செய்கின்றனர். இத்திட்டத்தில் விதவைகள், கணவரால் கைவிடப்பட்டவர்கள், ஊனமுற்றவர்கள், திருநங்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு ரூ.30 ஆயிரம் மதிப்புள்ள கறவை மாடுகள் வழங்கப்படும் என கால்நடைத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கரூர் மாவட்டத்தில் 2 நாட்களில் 43.90 மி.மீ. மழை

கரூர், : கரூர் மாவட்டத்தில் கடந்த 2 நாட்களில் 43. 90 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. சராசரியாக 4.49 மி.மீ. மழை பெய்துள்ளது. வங்கக் கடலில் ஏற்பட்ட குறைந்த காற்றழுத்தம் காரணமாக கடந்த 2 வாரங்களாக கரூர் மாவட்டத்தில் பலத்த மழை பெய்தது. இடையே 2 நாட்கள் மழை ஓய்ந்திருந்த நிலையில், மீண்டும் தென் தமிழகத்தில் மழை பெய்யும் என்ற அறிவிப்பைத் தொடர்ந்து கடந்த 2 நாட்களாக பகல் நேரங்களில் அவ்வப்போது மழை பெய்தது. இதன்படி, கடந்த 2ம் தேதி முதல் 3ம் தேதி காலை 8 மணி வரை அரவக்குறிச்சியில் 0.80 மி.மீ. மாயனூரில் 3மி.மீ., கரூரில் 6.40 மி.மீ., தோகைமலையில் 4 மி.மீ., பஞ்சப்பட்டியில் 3.60 மி.மீ., கிருஷ்ணராயபுரம் பகுதியில் 5மி.மீ., மயிலம்பட்டியில் 6.20 மி.மீ. என மொத்தம் 38 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. மேலும், நவம்பர் 3ம்தேதி முதல் 4ம் தேதி (நேற்று)

காலை வரை மாயனூரில் 3 மி.மீ., கரூரில் 4.30 மி.மீ., பஞ்சப்பட்டியில் 3.60 மி.மீ., கிருஷ்ணராயபுரம் பகுதியில் 5மி.மீ. என மொத்தம் 15.90 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. கடந்த 2 நாட்களாக கரூர் மற்றும் மாயனூர் பகுதியில் மழை பெய்துள்ளது. இதன் அடிப்படையில் கடந்த 2 நாட்களில் 43.90 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. சராசரியாக 4.49 மி.மீ. மழை பெய்துள்ளதுகுறிப்பிடத்தக்கது.

## வேளாண். பேராசிரியர் விளக்கம் மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களை காக்க வழிமுறைநீண்டகால நெல் ரகம் சாகுபடி செய்யலாம்

நாகை, : நாகை மாவட் டம் சிக்கல் வேளாண். அறிவியல் நிலைய தலைவர் பேராசிரியர் முனைவர் ராஜேந்திரன் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார். மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நெற்பயிரை பாதுகாக்க, தகுந்த வடிகால் வசதியை ஏற்படுத்தி வயல்களில் தேங்கி உள்ள மழை நீரை வடித்து வேர் பகுதிக்கு காற்றோட்ட வசதியை ஏற்படுத்த வேண்டும். மழைநீர் வடிந்தவுடன், பயிர் இழந்த பகுதியில் அதே வயலில் உள்ள பயிரை களைத்து இடை நிரப்புதல் செய்ய வேண்டும். சிறிதளவே பாதிக்கப்பட்ட நெற்பயிரை பாதுகாக்க ஒரு லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் யூரியாவுடன் 2.5 கிராம் சிங்க் சல்பேட் கலந்து இலை வழியாக தெளிக்கலாம். தண்ணீரை வடித்தவுடன் நாற்றங்காலில் 8 செமீட்டருக்கு சூடோ மோனாஸ் 600 கிராம் என்ற அளவில் 10 கிலோ மணலு டன் கலந்து தெளித்து முன் கருகல் நோயிலிருந்து பாதுகாக்கலாம். முற்றிலுமாக சேதமடைந்த நெற்பயிரை குறுகிய கால வயதுடைய ஏடிடி 45, 36 போன்ற ரகங்களை மேட்டுப்பாத்தி முறையில் நாற்றங்கால் அமைத்து சாகுபடி செய்ய வேண்டும். மழை நீரில் மூழ்கிய நெற்பயிரை பூச்சி மற்றும் நோய்கள் எளிதில் தாக்கும் என்பதால், அதிகபடியான அளவு தழைச்சத்து உரம் இடுவதை தவிர்க்க வேண்டும். மேலும் பரிந்துரைக்கப்பட்ட யூரி யாவை குறைந்த அளவாக பிரித்து இட வேண்டும். வெள்ளநீரில் மூழ்கிய நெற்பயிர்கள் ஊட்டச்சத்து பற்றாக்குறையால் பாதிக்கப்படும். எனவே நெற்பயிருக்கு உடனடியாக தழைச்சத்து கிடைக்க ஏக்கருக்கு அம்மோனியம் சல்பேட் 50 கிலோ அல்லது அமோனியம் குளோரைடு 42

கிலோ என்ற அளவில் இடலாம் அல்லது ஏக்கருக்கு 22 கிலோ யூரியாவுடன் 18 கிலோ ஜிப்சம் மற்றும் 4 கிலோ வேப்பம் புண்ணாக்கு ஆகியவற்றை ஒன்றாக கலந்து ஒரு இரவு முழுவதும் வைத்திருந்து மறுநாள் தெளிக்கும்போது அதனு டன் பொட்டாஷ் 17 கிலோ கலந்து இட வேண்டும். இலைவழி மூலம் ஏக்கருக்கு யூரியா 2 கிலோவுடன் சிங் சல்பேட் ஒரு கிலோவை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். அல்லது டிஏபி 4 கிலோவை 10 லிட் டர் தண்ணீரில் கலந்து இரவு முழுவதும் ஊறவை த்து மறுநாள் தெளிந்த நீரை எடுத்து அதனுடன் 190 லிட் டர் தண்ணீர் கலந்து அதனு டன் பொட்டாஷ் 2 கிலோ கலந்து தெளித்து நெற்பயிரை பாதுகாக்கலாம். மழைநீர் வடிந்தவுடன் இலை வழி மூலம் ஏக்கருக்கு 40 கிலோ பசுஞ்சாணத்தை 100 லிட்டர் தண்ணீரில் கரைத்து இரவு முழுவதும் ஊறவைத்து மறுநாள் தெளிந்த நீரை வடிகட்டி அதனுடன் மேலும் 100 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். அல்லது 200 லிட்டர் தண்ணீரில் 500 கிராம் சூடோமோனாஸ் கலந்து தெளித்தும் பூஞ்சாணம் மற்றும் பாக்டீரியா நோய் ஏற்படுவதை தடுக்கலாம். தற்போதைய காலநிலையில் நெற்பயிரில் தோன் றும் குருத்துப்பூச்சி மற்றும் இலை சுருட்டும் புழுவை கட்டுப்படுத்த ஏக்கருக்கு கார்டாப் ஹைட்ரோகுளோரைடுடன் 8 கிலோ மருந்தை 10 கிலோ மண லுடன் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். மழைநீர் தேங்கி நிற்கும் நெல் வயல்களில் தோன்றும் கூண்டு புழுவை கட்டுப்படுத்த ஏக்கருக்கு 800 மி.லி. குளோர் பைரிபாஸ் மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். சாறு உறிஞ் சும் பூச்சிகளான பச்சை தத்து பூச்சி, புகையான் பூச்சிகளை கட்டுப்படுத்த அசாடிராக்டின் 500 மி.லி. மருந் தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். எதிர்வரும் ஆண்டுகளில் மழைவெள்ளத்தால் பாதிக்கப்படும் பகுதிகளில் பள்ளக்கால் பகுதிக்கேற்ற மழை வெள்ளத்தை தாங்கி வளரக்கூடிய நீண்ட கால நெல் ரகமான சி.ஆர்.1009 சப் 1, மத்திய கால நெல் ரகமான சுவர்ணா சப் 1 ஆகிய ரகங்களை சாகுபடி செய்யலாம். மழைவெள்ளத்தால் உப்புநீர் ஊடுருவும் பகுதிகளுக்கு திருச்சி 3 என்ற மத்திய கால நெல் ரகத்தை தேர்வு செய்து சாகுபடி செய்யலாம்.

**<u>கோவிலாங்குளத்தில் அதிகபட்சமாக 42 மி.மீ மழை பதிவு</u>**

விருதுநகர், :விருதுநகர் மாவட்டத்தில் அதிகபட்சமாக 42 மி.மீ மழை பதிவாகி உள்ளது. மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று காலை 6 மணி வரை பெய்த மழையளவு (மீ.மீ) வருமாறு: அருப்புக்கோட்டை 9.2, சாத்தூர் 2, திருவில்லிபுத்தூர் 2, சிவகாசி 14, விருதுநகர் 8.6, திருச்சுழி 4, காரியாபட்டி 8, வத்திராயிருப்பு 17, கோவிலாங்குளம் 42.6 மி.மீ மழை பதிவாகி உள்ளது. மாவட்டத்தில் நேற்று காலை 11 மணி முதல் தொடர் சாரள் மழை பெய்தது. மாவட்டத்தில் உள்ள அணைகளில் நீர் மட்டம் வருவமாறு: பெரியார் அணையின் 43 அடி கொள்ளளவில் 40 அடி நீரும்,கோவிலாறு அணையின் 40 அடி கொள்ளளவில் 27 அடி நீரும், ஆணைக்குட்டம் அணையின் 23 அடி கொள்ளளவில் 19 அடி தண்ணீரும் உள்ளது. குல்லு�ர்சந்தை அணையின் 7.5 அடி கொள்ளளவில் 2 அடி நீரும், உ.கோவில்வார்பட்டி அணையின் 17.5 அடி கொள்ளளவில் 4.6 அடி நீரும், வெம்பக்கோட்டை அணையின் 23 அடி கொள்ளளவில் 6 அடி நீரும் உள்ளது.

**<u>கீழ்பவானி வாய்க்காலில் கான்கிரீட் தளம் விவசாயிகளிடம் இன்று கருத்துகேட்பு</u>**

ஈரோடு, : விவசாயிகளின் கடும் எதிர்ப்பையும் மீறி கீம்பவானியில் மீண்டும் கான்கிரீட் தளம் அமைக்க பொதுப்பணித்துறை நடவடிக்கை எடுத்து வருவது விவசாயிகளிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இது தொடர்பாக இன்று (4ம் தேதி) கருத்துகேட்பு கூட்டம் நடைபெற உள்ளது. கீம்பவானி வாய்க்காலில் பாசனத்திற்கு திறந்துவிடப்படும் தண்ணீர் வீணாவதை தடுக்கும் வகையில் கான்கிரீட் தளம் அமைக்க பொதுப்பணித்துறையினர் கடந்த ஆண்டில் முடிவு செய்தனர். ஆனால், இந்த திட்டம் நிறைவேற்றப்பட்டால் கசிவு நீர் மூலம் பாசனம் பெறும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் தரிசாக மாறிவிடும் என்றும், நூற்றுக்கணக்கான உள்ளாட்சி அமைப்புகளில் போடப்பட்டுள்ள போர்வெல்கள் காய்ந்துவிடும் என்றும் மழைநீர் சேகரிப்பு திட்டத்திற்கு

எதிராக உள்ளதால் நிலத்தடி நீர் பாதிக்கப்படும் என்று விவசாயிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததோடு கீழ்பவானி கான்கிரீட் எதிர்ப்பு இயக்கம் என்ற அமைப்பை தொடங்கி விவசாயிகள் பல்வேறு கட்ட போராட்டங்களில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தனர். உலக வங்கி நிதி உதவியுடன் ரூ.1300 கோடி செலவில் இத்திட்டம் நிறைவேற்ற முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால் இந்த திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமெனில் கீழ்பவானி வாய்க்கால் கரையில் உள்ள சுமார் 1 லட்சம் மரங்களை வெட்ட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதையடுத்து இந்த திட்டம் சுற்றுச்சூழலுக்கு எதிரானது என்று கூறி உலக வங்கி நிதி உதவி வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டது. ஆனாலும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகளை தீவிரப்படுத்தி வந்தனர். விவசாயிகளின் தொடர் போராட்டங்களினால் பொதுப்பணித்துறையினர் பின்வாங்கிக்கொண்டதோடு திட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டதாக அறிவித்தனர். கடந்த 8 மாதகாலமாக மவுனமாக இருந்த பொதுப்பணித்துறையினர் தற்போது மீண்டும் கான்கிரீட் கால்வாய் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளில் இறங்கி உள்ளனர். இது தொடர்பாக, ஈரோடு கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள பொதுப்பணித்துறை அலுவலகத்தில் கண்காணிப்பு பொறியாளர் வெங்கடாசலம் தலைமையில் இன்று (4ம் தேதி) காலை 10 மணிக்கு விவசாயிகளிடம் கருத்து கேட்பு கூட்டம் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கீழ்பவானி விவசாயிகள் நலச்சங்கம் உள்ளிட்ட குறிப்பிட்ட சில சங்கங்களுக்கு மட்டும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. கான்கிரீட் கால்வாய் திட்டம் கைவிடப்பட்டதாக வேளாண்குறைதீர்க்கும் கூட்டங்களில் பொதுப்பணித்துறை அதிகாரிகள் அறிவித்திருந்த நிலையில் தற்போது மீண்டும் கருத்து கேட்பு கூட்டம் நடத்த முடிவு செய்திருப்பது விவசாயிகளிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

**மானிய விலையில் உலர் தீவனம்**

பந்தலூர், : பந்தலூரில் மானிய விலையில் கால்நடை வளர்ப்போர்க்கு வைக்கோல் வழங்கப்பட்டது பந்தலூரில், உலர்தீவன திட்டத்தின்மூலம் பந்தலூர் கால்நடை மருத்துவமனை சார்பில் பயனாளிகளுக்கு மானிய விலையில் வைக்கோல் வழங்கப்பட்டது. பாலக்காடு பகுதியிலிருந்து ரூ.11.90க்கு வைக்கோல்களை கொள்முதல் செய்து ரூ.2.00க்கு

பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.  ஒரு பயனாளிக்கு 105 கிலோ வழங்கப்பட்டது.  கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மனோகரன், உதவி இயக்குநர் தயாசேகர் உத்தரவின்பேரில், பந்கலார் கால்நடை மருக்குவமனை மருக்குவர் மங்கம்மாள், சேரம்பாடி கால்நடை மருத்துவர் பிரபு ஆகியோர் பயனாளிகளுக்கு வைக்கோல் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் பந்தலூர், உப்பட்டி, தேவாலா, அத்திக்குன்னா போன்ற பகுதிகளைச் சேர்ந்த 63 பயனாளிகள் பயன்பெற்றனர்.

**<u>பெரம்பலூர் மாவட்டத்தில் முதன்முறையாக சூரிய சக்தி மோட்டார் மூலம் விவசாய சாகுபடி பணிகள்விவசாயி சாதனை</u>**

பெரம்பலார், : பெரம்பலார் மாவட்டக்கில் முகன்முறையாக சூரிய மின் சக்தி மூலம் மோட்டாரை இயக்கி விவ சாய சாகுபடி பணிகளை ஒரு விவசாயி மேற்கொண்டு வருகிறார். பெரம்பலூர் மாவட் டம், சத்திரமனை நடுக்கெருவைச் சேர்ந்கவர் செல்லமுக்கு (50). 7ம்வகுப்புவரை மட்டுமே படித்துள்ள இவருக்கு ஊருக்கு மேற்கேயுள்ள பச்சை மலை அடிவாரத்தில் 4.34ஏக்கர் புன்செய் நிலம் உள்ளது. இவர் தனது வயலில், வெங்காயம், கடலை, மிளகாய் சாகுபடி செய்து வருகிறார். இதற்காக வயலிலுள்ள கிணற்று மின்மோட்டாருக்கு மின்இணைப்பு கேட்டு 3ஆண்டு களுக்கு முன்பு விண்ணப் பித்தும் இணைப்பு வழங்கப்படவில்லை. டீசல் விலையேற்றத்தால் மாதத்திற்கு ரூ.10முதல் 15ஆயிரம்வரை ஆகும் செலவால் சிரமப்பட்டு வந்தபோதும், சொட்டுநீர்ப் பாசனத்தைக் கொண்டு சமாளித்து வந்தார். இந்நிலையில் வீடுகளுக்கு சோலார்எனர்ஜி மூலம் மின்சாரம் பெறப்படுவதுபோல, பம்பு செட்டுக்கும் வழங்கினால் பயன்படுத்தலாமே என யோசித்து, ஒன்றிய அலுவலகத்தில் மனு அளித்தார். அப்போதுதான் வேளாண் பொறியியல் துறை மூலம் சோலார் எனர்ஜி பேனல் களை பெறுவதற்கு மானியத்துடன் கூடிய சிறப்புக்கிட்டம் உள்ளது தெரியவந்தது. இதற்கு 75 சதவீதத்திற்கு மேலாக மானியம் வழங்கப்படுவதால் துணிந்து சோலார் எனர்ஜிக்கான வசதிகளை செய்துதர வேளாண் பொறியியல் துறையினரைக் கேட்டுக்கொண்டார்.செல்லமுத்து விண்ணப்பித்தபடி, தற்போது வேளாண் பொறியியல் துறை மூலம் பெரம்பலார் மாவட்டக்கில் முகல் முறையாக சோலார்எனர்ஜி மூலம் பம்புசெட்டு இயக் கும் முதல் விவசாயி

என்ற சிறப்பை பெற்றுள்ளார். இது குறித்து செல்லமுத்து கூறுகையில், இரவுநேரம் தவிர்த்து, பகலில் வெயிலடிக்கும் போதெல் லாம் தண்ணீர் பாய்ச்சிக்கொள்ள முடிகிறது. மின்கட்டண பிரச்னையோ, டீசல்புகை மாசு பாடோஇல்லாமல், சூரியசக்தியை நம்பி, சாகுபடிசெய்வதால் பெரும் நிம்மதியாக உள் ளது. இதனைக்கொண்டே நெற்பயிர் சாகுபடிசெய்யவும் முடிவு செய்துள்ளேன் என்றார். இதுகுறித்து வேளாண் பொறியியல்துறை உதவிப்பொறியாளர் அறிவழகன் கூறுகையில், புதிய புதுப்பிக்கவல்ல சக்தித்திட்டம் என்றத் திட்டத்தின்கீழ், செல்ல முத்துவுக்கு ரூ.5லட்சத்து 1,000 மதிப்பில், சோலார்எனர்ஜி அமைப்பு பொருத்தப் பட்டுள்ளது. இதை பயன்படுத்தும் விவசாயிக்கு 80சதவீத மானியம் அளிக்கப்படுகிறது. குறிப்பாக ரூ1.17லட்சம் செலுத்தினால் போதும். மீதமுள்ள ரூ.3.84லட்சம் மானியமாக வழங்கப்படுகிறது. சோலார் பேனல்களுக்கும், மோட்டாருக்கும் வாரண்டி உள்ளது. இத்தகவலறிந்து புதிதாக விண்ணப்பித்துள்ள 28பேருக்கு சோலார்எனர்ஜி மூலம் பம்புசெட் இயக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றார். பெரம்பலூர் மாவட்டத்தில் புதிதாக விவசாயிகள் சோலார்எனர்ஜி மூலம் பம்ப் செட்டுகளை இயக்க முன்வருவது முன்னேற்றத்திற்கான அறிகுறியே எனலாம். இதற்காக வேளாண்துறை, வேளாண் பொறியியல்துறை, தோட்டக்கலை துறைகளிலும் விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சூலமங்கலத்தில் உழவர் மன்ற தொடக்க விழா**

பாபநாசம், : அய்யம்பேட்டை அடுத்த சூலமங்கலத்தில் சூலம் உழவர் மன்ற தொடக்க விழா நடந்தது. ஊராட்சி தலை வர் மணிமாறன் தலைமை வகித்தார். துணைத்தலைவர் அறிவழகன் முன்னிலை வகித்தார். உழவர் மன்ற ஒருங்கிணைப்பாளர் உலகநாதன் வரவேற்றார். மாவட்ட நபார்டு வங்கி வளர்ச்சி அதிகாரி சுப்ரமணியன் பேசும்போது, நம் நாட்டில் 72 சதவீத மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்கின்றனர். இவர்களது வாழ்க்கையில் விவசாயம் என்பது நிரந்தரமற்ற வருவாய் இல்லாத தொழிலாக மாறி வருகிறது. இன்றைய இளைஞர்கள் விவசாயம் பக்கமே தலை காட்டுவதில்லை. குறிப்பாக கிராமத்தில் உள்ள படித்த பட்டம் பெற்றவர்களோ, பொறியியல் பட்டதாரிக ளோ, விவசாயமே

வேண் டாம் என்று சொல்லும் அளவிற்கு நிலைமை உள்ளது. இந் நிலையை மாற்றி மாற்றுப்பயிர், மாற்று தொழில்நுட் பம், விற்பனை வாய்ப்பு களை கண்டறிந்து விவசாயம் வணிக மயமாக மாற்ற வேண்டும். அப்போது தான் விவசாயியின் வாழ்க்கையில் நம்பிக்கை, மகிழ்ச்சி வரும் என்றார். சூலமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க செயலாளர் இந்திரஜித், பாபநாசம் விவேகானந்தா சமூக கல்வி சங்க செயலாளர் கண்ணதாசன், பாபநாசம் தோட்ட கலைத் துறை உதவி அலுவலர் மணிவண்ணன், விவேகானந்தா சமூக அமைப்பு வேளாண் பிரிவு திட்ட அலுவலர் வேல்முருகன் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை களப்பணியாளர் லீமா ரோஸ் செய்திருந்தார். சூலம் உழவர் மன்ற ஒருங்கிணைப்பாளர் கோவிந்தராஜ் நன்றி கூறினார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தனியார் பால் விலையை லிட்டருக்கு ரூ.6 முதல் ரூ.8 வரை உயர்த்த திட்டம் அரசு உடனடியாக தலையிட வேண்டும் என்று பால்முகவர்கள் கோரிக்கை**




தனியார் பால் விலையை லிட்டருக்கு ரூ.6 முதல் ரூ.8 வரை உயர்த்த திட்டமிட்டுள்ளனர். இதில் அரசு உடனடியாக தலையிட வேண்டும் என்று பால்முகவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். பால் விலை உயர்வு கடந்த சில மாதங்களுக்கு முன்பு தனியார் பால் விலை லிட்டருக்கு ரூ.2 விலை உயர்த்தப்பட்டது. இந்த நிலையில் கொள்முதல் விலை உயர்வை காட்டி தமிழக அரசு ஆவின் பால் விலையை நவம்பர் 1-ந் தேதி முதல் லிட்டருக்கு ரூ.10 உயர்த்தியது.

ஆவின் நிறுவனம் பால் விலையை உயர்த்தியதை தொடர்ந்து, தற்போது தனியார் நிறுவனங்களும் பால் விலையை மீண்டும் உயர்த்த திட்டமிட்டுள்ளன. இதுதொடர்பாக பால் முகவர்கள் சங்க மாநில தலைவர் எஸ்.ஏ.பொன்னுச்சாமி நேற்று நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:- தனியார் பால் தனியார் பால் நாளொன்றுக்கு தமிழகம் முழுவதும் 1லு கோடி லிட்டரும், சென்னையில் 25 லட்சம் லிட்டரும் சப்ளை செய்கிறது. அதேபோல், ஆவின் பால் மூலம் தமிழகம் முழுவதும் நாளொன்றுக்கு 21 லட்சம் லிட்டரும், சென்னையில் 11 லட்சம் லிட்டரும் சப்ளை செய்யப்படுகிறது.
அரசு நிறுவனமான ஆவின் மூலம் கொழுப்பு சத்து செறிவூட்டப்பட்ட பால் ஒரு லிட்டர் ரூ.45-க்கும், சமன்படுத்தப்பட்ட பால் ரூ.41-க்கும், நிலைப்படுத்தப்பட்ட பால் ரூ.37-க்கும் விற்பனை செய்யப்படுகிறது. அதே நேரத்தில், மாத அட்டை வைத்திருப்பவர்களுக்கு, இந்த விலையில் இருந்து லிட்டருக்கு ரூ.2 முதல் ரூ.3 வரை குறைத்து வழங்கப்படுகிறது. ஆனால், தனியார் பால் நிறுவனங்கள் கொழுப்பு சத்து செறிவூட்டப்பட்ட பாலை ஒரு லிட்டர் ரூ.48-க்கும், சமன்படுத்தப்பட்ட பாலை ரூ.44-க்கும், நிலைப்படுத்தப்பட்ட பாலை ரூ.40-க்கும், கொழுப்பு சத்து நீக்கப்பட்ட பாலை ரூ.34-க்கும் விற்பனை செய்கின்றன. ரூ.6 முதல் ரூ.8 வரை உயர்த்த திட்டம் இந்த நிலையில் தனியார் பால் கொள்முதல் விலையும், ஆவின் பால் கொள்முதல் விலையும் சரிசமமாக இருப்பதால் பால் உற்பத்தியாளர்கள் ஆவின் நிறுவனத்துக்கே பால் கொடுக்க தொடங்கிவிடுவார்கள். எனவே தனியார் பால் விற்பனையாளர்கள், பால் உற்பத்தியாளர்களை தக்க வைத்துக்கொள்ளும் விதமாக பால் விலையை லிட்டருக்கு ரூ.6 முதல் ரூ.8 வரை உயர்த்த திட்டமிட்டிருக்கின்றனர். இதன்மூலம் பால் உற்பத்தியாளர்களுக்கு விற்பனை விலையில் இருந்து 50 சதவீதம் தொகை கொள்முதல் விலையில் சேரும். இந்த ஆண்டில் மட்டும் கடந்த ஜனவரி, மார்ச், மே, அக்டோபர் ஆகிய மாதங்களில் தனியார் பால் விலை உயர்த்தப்பட்டுள்ளது. தற்போது மீண்டும் பால் விலை உயர்த்துவது பொதுமக்களுக்கு மிகுந்த சிரமத்தை ஏற்படுத்தும். அரசு தலையிட வேண்டும். பஸ் கட்டணம், ஆட்டோ கட்டணம் போன்றவற்றை அரசு நிர்ணயம் செய்வது போல, தனியார் பால் விலை நிர்ணயம் செய்வதிலும் தமிழக அரசு உடனடியாக தலையிட்டு இதற்கு

ஒரு தீர்வு ஏற்பட வேண்டும். இல்லையென்றால், இதேபோல் தொடர்ந்து பால் விலை உயர்ந்து கொண்டே இருக்கும். இதனால் பால் பொருட் களின் விலையும் அதிகரிக்கும். இந்திய பால் நிறுவனத்தை காப்பாற்ற பால் உற்பத்தியாளர்கள், பால் முகவர்கள், பொதுமக்கள் மற்றும் அனைத்து தரப்பு வணிகர்களும் ஒன்றிணைந்து விழிப்புணர்வு இயக்கத்தை தொடங்க இருக்கிறோம். தொடர்ந்து தீர்வு ஏற்படவில்லை என்றால், உயர்நீதிமன்றத்தை நாடுவதற்கு தயாராக உள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

**<u>ஒரு வார காலத்துக்கு பிறகு கொடைக்கானல் பகுதியில் ஒரு மணி நேரம் பலத்த மழை மரம் சாய்ந்ததால் போக்குவரத்து பாதிப்பு</u>**

கொடைக்கானல், ஒரு வார காலத்துக்கு பிறகு கொடைக்கானல் பகுதியில் ஒரு மணி நேரம் பலத்த மழை கொட்டியது. மரம் சாய்ந்ததால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

<u>அணைகள் நிரம்பின</u>

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் பகுதியில் கடந்த ஒரு மாத காலமாக பலத்த மழை கொட்டியது. இதனால் நகருக்கு குடிநீர் வழங்கும் அணைகள் முழுவதும் நிரம்பி உபரி நீர் வெளியேறி வருகிறது. கொடைக் கானல் ஏரி நிரம்பி அதன் மூலம் வெளியேறும் தண்ணீரின் காரணமாக வெள்ளிநீர் வீழ்ச்சியில் வெள்ளம் கொட்டி வருகிறது. இதன் காரணமாக பழனிப்பகுதியில் உள்ள பல அணைகள் நிரம்பி உள்ளன. இந்த நிலையில் கடந்த வாரம் மழை ஓய்ந்தது.

<u>பலத்த மழை</u>

நேற்று அதிகாலை முதலே வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. காலை 8 மணிக்கு சாரல் மழை பெய்தது. காலை 8.45 மணி முதல் 9.45 மணி வரை பலத்த மழை கொட்டியது. இதனால் சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. எனவே காலை வேளையில் பள்ளிக்கூடத்துக்கு சென்ற மாணவ–மாணவிகள் பாதிக்கப்பட்டனர். இந்த நிலையில் மழை காரணமாக கொடைக்கானல்–வத்தலக்குண்டு சாலையில் குருசடி என்ற இடத்தில் அருகே மரம் வேரோடு சாய்ந்தது. எனவே அந்த பகுதியில் சுமார் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இது பற்றி அறிந்ததும் நெடுஞ்சாலைத்துறை உதவி பொறியாளர் அச்சுத கண்ணன்

தலைமையில் ஊழியர்கள் அந்த மரத்தை வெட்டி அகற்றினர். இதன் பின்னர் அந்த பகுதியில் போக்குவரத்து இயல்பு நிலைக்கு வந்தது.

கனரக வாகனங்கள்

பலத்த மழை காரணமாக நிலச்சரிவு ஏற்பட்ட டம்டம்பாறை பகுதியில் பராமரிப்பு பணிகள் முடிவடைந்துள்ளது. இருப்பினும் காலை முதல் மாலை வரை இலகு ரக வாகனங்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றன. இதனால் கொடைக்கானல் பகுதியில் உள்ள பொது மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். எனவே மாவட்ட நிர்வாகம் உடனடி நடவடிக்கை மேற்கொண்டு 24 மணி நேரமும் போக்குவரத்துக்கு அனுமதி அளிப்பதுடன், கனரக வாகனங்களையும் அனுமதிக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். திண்டுக்கல் மாவட்டம் முழுவதும் நேற்று காலையில் இருந்தே வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. திண்டுக்கல், பழனி, நத்தம் உள்பட மாவட்டத்தில் பல்வேறு பகுதியில் சாரல் மழை பெய்தது.

## நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர் மழை: முல்லைப்பெரியாறு அணை நீர்மட்டம் 138 அடியை தாண்டியது

முல்லைப்பெரியாறு அணை நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் அணையின் நீர்மட்டம் நேற்று 138 அடியை தாண்டியது.

138 அடியை தாண்டியது

முல்லைப்பெரியாறு அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினமும் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்தது. இந்த மழையால் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது. முல்லைப்பெரியாறு அணையில் நேற்று முன்தினம் 15 மில்லிமீட்டரும், தேக்கடியில் 16.2 மில்லிமீட்டர் மழையும் பதிவானது. நேற்று காலை 6 மணி நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 138 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 3 ஆயிரத்து 587 கனஅடியாக இருந்தது. அணையில் இருந்து இரைச்சல் பாலம் வழியாக வினாடிக்கு 416 கன அடியும், ராட்சத குழாய்கள் வழியாக வினாடிக்கு 1,400 கன அடியும் என மொத்தம் வினாடிக்கு 1,816 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டு உள்ளது.

அணையில் 6 ஆயிரத்து 622 மில்லியன் கன அடி தண்ணீர் இருப்பு உள்ளது.

விரைவில் 142 அடியை எட்டும்

நேற்று மாலை 4 மணிக்கு அணையின் நீர்மட்டம் 138.40 அடியாக உயர்ந்தது. ஒரே நாளில் அணையின் நீர்மட்டம் 1 அடி உயர்ந்து உள்ளது. ஏனெனில் நேற்று முன்தினம் அணையின் நீர்மட்டம் 137.40 அடியாக இருந்தது குறிப்பிடத்தக்கது. நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இதேபோன்று மழை நீடித்தால் இன்னும் சில நாட்களில் அணையின் நீர்மட்டம் 142 அடியை எட்டிவிட வாய்ப்பு உள்ளது. அதேபோன்று 71 அடி உயரம் கொண்ட வைகை அணையின் நீர்மட்டம் நேற்று காலையில் 54 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 3 ஆயிரத்து 207 கன அடி தண்ணீர் வருகிறது. அணையில் இருந்து குடிநீர் மற்றும் பாசனத்திற்காக வினாடிக்கு 1,660 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணையில் 2 ஆயிரத்து 560 மில்லியன் கனஅடி தண்ணீர் இருப்பு உள்ளது. அணையின் நீர்மட்டம் நேற்று மாலை 4 நிலவரப்படி 54.30 அடியாக இருந்தது.

**இலுப்பூர் கால்நடை பராமரிப்பு கோட்டத்தில் ரூ.3¼ கோடியில் விலையில்லா கறவை பசுக்கள்–வெள்ளாடுகள் அமைச்சர் விஜயபாஸ்கர் தகவல்**

இலுப்பூர் கால்நடை பாராமரிப்பு கோட்டத் தில் ரூ.3 கோடியே 22 லட்சம் மதிப்பில் கறவைப் பசுக்கள் மற்றும் வெள் ளாடுகள் வழங்கப்பட உள்ளது என அமைச்சர் விஜயபாஸ்கர் தெரிவித்துள்ளார். கால்நடை பராமரிப்பு அலுவலகம் புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூரில் கால்நடை பரா மரிப்பு துறை உதவி இயக்குனர் அலுவலகத்தை மாவட்ட வருவாய் அலுவலர் மாரிமுத்து தலைமையில் மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் விஜயபாஸ்கர் திறந்து வைத்து பேசினார். அப்போது அவர் பேசியதாவது:– தமிழக அரசு கால்நடை பராமரிப்புத்துறையின் கீழ் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல் படுத்தி வருகிறது. அதன்படி புதுக்கோட்டை மாவட்டத் தில் இலுப்பூரை தலைமையிட மாகக் கொண்டு புதிய கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குனர் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத் தில்

மண்டல இணை இயக்குனர் கட்டுப்பாட்டின் கீழ் புதுக்கோட்டை மண்டலத்தில் புதுக்கோட்டை மற்றும் அறந்தாங்கி ஆகிய இரண்டு கோட்டங்கள் செயல் பட்டு வருகின்றன. இதில் ஒரு பிரதான மருத்துவமனை, 4 கால்நடை மருத்துவமனைகள், 77 கால்நடை மருந்தகங்கள், 2 நடமாடும் கால்நடை மருந்தகங்கள் மற்றும் 33 கால்நடை கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் தற்பொழுது புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள இலுப்பூர் உதவி இயக்குனர் அலுவலகக் கட்டுப்பாட்டின் கீழ் குன்றாண்டார்கோவில், இலுப்பூர், பொன்னமராவதி ஆகிய வருவாய் வட்டங்களும், அன்னவாசல், விராலிமலை, குன்றாண்டார்கோவில் மற்றும் பொன்னமராவதி ஆகிய ஊராட்சி ஒன்றியங்க ளும் பயன்பெறும். இப்பகுதிக ளில் 23 கால்நடை மருந்தகங் களும், 24 கிளை நிலையங்களும் செயல் படுத்தப்பட உள்ளது. இதன் மூலம் கால்நடை மருத்துவச் சேவையினை மேம் படுத்திடவும், அரசின் நலத் திட்டங்களை அனைத்து குக்கிராமங்களுக்கும் சென் றடையும் வண்ணம் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த இலுப்பூர் கோட்ட உதவி இயக்குனர் அலுவலகம் ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு உள்ளது. இதன் மூலம் ஒரு கால்நடை பரா மரிப்பு உதவி இயக்குநர், ஒரு மேலாளர், இரண்டு இளநிலை உதவியாளர்கள், ஒரு தட்டச்சர், ஒரு ஊர்தி ஓட்டுநர், ஒரு அலுவலக உதவியாளர் மற்றும் ஒரு இரவுக் காவலர் பணியிடங்கள் தோற்றுவிக்கப் பட உள்ளது. மேலும், ரூ.6 லட்சம் மதிப்பில் ஒரு பொலிரோ வாகனமும் வழங்கப்பட உள்ளது. பொருளாதாரத்தை மேம்படுத்த இலுப்பூர் கோட்ட கால் நடை பராமரிப்புச் சேவை பகுதிகளில் நடப்பாண்டில் ரூ.1 கோடியே 7 லட்சம் மதிப்பீட்டில் 300 விலையில்லா கறவை பசுக்களும், ரூ.2 கோடியே 15 லட்சம் மதிப்பீட் டில் 1630 பயனாளிகளுக்கு 6520 விலையில்லா வெள்ளாடு கள் மற்றும் செம்மறி ஆடுகள் வழங்கப்பட உள்ளது. புதிதாக புதுக்கோட்டை மண்டலத்தில் மூன்றாவது கோட்டமாக இலுப்பூர் கோட் டம் தோற்றுவிக்கப்பட்டதன் மூலம் 23 அரசு கால்நடை உதவி மருத்துவர்கள் கட்டுப் பாட்டில் கால்நடை ஆய் வாளர்கள் மற்றும் கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் மூலம் அரசின் நலத்திட்டங்கள் மற்றும் மருத்துவச்

சேவை வசதிகள் இக்கோட்டத்தில் உள்ள சுமார் 1 லட்சத்து 40 ஆயிரத்து 400 கால்நடைகள், 1 லட்சத்து 13 ஆயிரத்து 200 வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகளின் கால்நடை உரிமையாளர்கள் பயனடை யும் வண்ணம் கண்காணிப்பு செய்யப்பட்டு உறுதி செய்யப் படும். எனவே, இதனை பயன் படுத்தி அனைத்து பொது மக்கள், விவசாயிகள், கால் நடை வளர்ப்போர், தங்கள் பொருளாதாரத்தை மேம் படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். அதிகாரிகள் இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் ராமையா, இணை இயக்குனர் (கூடுதல் பொறுப்பு) மரு.தேவ தாஸ், வருவாய் கோட்டாட்சி யர் பூமி, கூட்டுறவு ஒன் றியங்களின் மாவட்டத் தலைவர் சின்னத்தம்பி, மதிய நல்லூர் ஊராட்சிமன்றத் தலைவர் ராமசாமி, அன்ன வாசல் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் விஜயநாதன், வீரப்பன், ஒன்றியக்குழுத் தலைவர் இளவரசிவசந்தன், பேரூராட்சித்தலைவர் ராஜ மன்னார், ஆத்மா குழுத் தலைவர் சாம்பசிவம், வட் டாட்சியர் திருமலை மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**<u>முல்லைப்பெரியாறு அணை நீர்மட்டம் 138 அடியை தாண்டியது</u>**



கூடலூர், முல்லைப் பெரியாறு அணை நீர்ப்பிடிப்பு பகுதி களில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் அணையின் நீர்மட்டம் நேற்று 138 அடியை தாண்டியது.138 அடியை தாண்டியது முல்லைப்பெரியாறு அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினமும் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்தது. இந்த மழையால் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது. முல்லைப் பெரியாறு அணையில் நேற்று முன்தினம் 15 மில்லிமீட்டரும், தேக்கடியில் 16.2 மில்லிமீட்டர் மழையும் பதிவானது. நேற்று காலை 6 மணி நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 138 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 3 ஆயிரத்து 587 கன

அடியாக இருந்தது. அணையில் இருந்து இரைச்சல் பாலம் வழியாக வினாடிக்கு 416 கன அடியும், ராட்சத குழாய்கள் வழியாக வினாடிக்கு 1400 கன அடியும் என மொத்தம் வினாடிக்கு 1,816 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டு உள்ளது. அணையில் 6 ஆயிரத்து 622 மில்லியன் கன அடி தண்ணீர் இருப்பு உள்ளது. விரைவில் 142 அடியை எட்டும் நேற்று மாலை 4 மணிக்கு அணையின் நீர்மட்டம் 138.40 அடியாக உயர்ந்தது. ஒரே நாளில் அணையின் நீர்மட்டம் 1 அடி உயர்ந்து உள்ளது. ஏனெனில் நேற்று முன்தினம் அணையின் நீர்மட்டம் 137.40 அடியாக இருந்தது குறிப்பிடத்தக்கது. நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இதேபோன்று மழை நீடித்தால் இன்னும் சில நாட்களில் அணையின் நீர்மட்டம் 142 அடியை எட்டிவிடும் வாய்ப்பு உள்ளது. அதேபோன்று 71 அடி உயரம் கொண்ட வைகை அணையின் நீர்மட்டம் நேற்று காலையில் 54 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 3 ஆயிரத்து 207 கன அடி தண்ணீர் வருகிறது. அணையில் இருந்து குடிநீர் மற்றும் பாசனத்திற்காக வினாடிக்கு 1,660 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணையில் 2 ஆயிரத்து 560 மில்லியன் கன அடி தண்ணீர் இருப்பு உள்ளது. அணையின் நீர்மட்டம் நேற்று மாலை 4 நிலவரப்படி 54.30 அடியாக இருந்தது. மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் நேற்று 56.80 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 236 கன அடி தண்ணீர் வருகிறது. வரத்து உள்ள தண்ணீர் அப்படியே தண்ணீர் திறந்து விடப்பட்டு உள்ளது. அணையில் 472.64 மில்லியன் கன அடி தண்ணீர் இருப்பு உள்ளது.

## <u>ஆண்டிப்பட்டி பகுதியில் மானாவாரி நிலங்களில் பயிர் சாகுபடி தீவிரம்</u>



கண்டமனூர், ஆண்டிப்பட்டி பகுதியில் மானாவாரி நிலங்களில் பயிர் சாகுபடி தீவிரமாக நடந்து வருகிறது.

<u>மானாவாரி நிலங்கள்</u>

தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி பகுதிகளில் கடந்த சில நாட்களுக்கு முன்பு வரை தொடர்ந்து மழை பெய்தது. இதனால் 2 ஆண்டுகளுக்கு பிறகு மானாவாரி நிலங்களில் பயிர் சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டி உள்ளனர். நீண்ட காலத்திற்கு பிறகு மானாவாரி நிலங்களில் விளைச்சலை கொடுக்கும் அளவுக்கு மழை பெய்துள்ளதாக விவசாயிகள் கருதுகின்றனர். எப்படியும் இன்னும் மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் பயிர் சாகுபடியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். ஆண்டிப்பட்டி ஒன்றியத்தில் உள்ள பிச்சம்பட்டி, வண்டியூர், சோத்தலூத்து, ராஜதானி, மொட்டனூத்து, அழகாபுரி, தெப்பம்பட்டி, பாலக்கோம்பை உள்ளிட்ட 100–க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் மானாவாரி நிலங்களில் விவசாய பணிகள் நடந்து வருகிறது.

<u>விவசாயிகள் மகிழ்ச்சி</u>

இந்த பகுதிகளில் கம்பு, சோளம், மக்காச்சோளம், கேழ்வரகு, எள்ளு, நிலக்கடலை, தட்டைப்பயறு, துவரை போன்ற பயிர்களை சாகுபடி செய்துள்ளனர். விதைக்கப்பட்ட விதைகள் முளைத்து செடியாக வளர்ந்து உள்ளது. தற்போது செடிகளில் களை பறிக்கும் பணி, மருந்து அடிக்கும் பணி போன்றவற்றில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த 2 ஆண்டுகளாக புழுதி பறக்கும் திடலாக காட்சி அளித்த நிலங்கள் தற்போது பசுமையாக காட்சி அளிக்கிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். தேவையான நேரத்தில் மழைப்பொழிவு இருந்தால் நல்ல மகசூல் பெற வாய்ப்பு இருப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## <u>களக்காடு பால் கூட்டுறவு சங்கம் 4,500 லிட்டர் உற்பத்தி செய்து சாதனை</u>

களக்காடு ஸ்ரீகிருஷ்ணா பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் நாள் ஒன்றுக்கு 4,500 லிட்டர் பால் உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளது. சங்கத்துக்கு 40 கறவைக்கூடங்கள் மூலம் பால் கொள்முதல் செய்யப் படுகிறது. அதிக அளவில் பால் கறவை செய்த 43 உறுப்பினர் களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக இந்த சங்கம் தொடர்ந்து லாபத்தில் செயல்பட்டு அதன் உறுப்பினர் களுக்கு ஊக்கத்தொகை வழங்கி வருகிறது. 50 உறுப்பினர்களுக்கு

ஐ.ஓ.பி. வங்கி மூலம் நபர் ஒன்றுக்கு 2 கறவை மாடுகள் அனுமதித்து மொத்தம் ரூ.30 லட்சம் கடன் வசதிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சங்கத்தில் நடந்த நிகழ்ச்சியில், கலுங்கடி கறவைக்கூடம் உறுப்பினர் கமலாவுக்கு ரூ.30 ஆயிரம் ஊக்கத்தொகையை சங்க தலைவர் நாராயணன் வழங்கினார். செயலாளர் ராமகிருஷ்ணன், துணை தலைவர் அமிர்தகனி ஆகியோர் உடன் இருந்தனர். இந்த தகவலை, நெல்லை மாவட்ட கூட்டுறவு ஒன்றிய மேலாண்மை இயக்குனர் சு.முருகபூபதி தெரிவித்தார்.

## விவசாயிகளுக்கு பயிற்சி

திருவள்ளூர், திருவள்ளூரை அடுத்த திருவாலங்காடு ஒன்றியம் சின்னமண்டலி கிராமத்தில் திருவள்ளூர் பொதுப்பணித்துறை நீர்வளஆதாரத்துறை குசஸ்தலை ஆறு வடிநிலக்கோட்டம், தமிழ்நாடு நீர்வள திட்டத்தின் கீழ் ஏரி நீரினை பயன்படுத்தி விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு நீரினை சிக்கனமாக பயன்படுத்துவது குறித்த ஒருநாள் பயிற்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு பொதுப்பணித்துறை பொறியாளர் அசோகன் தலைமை தாங்கினார். உதவி செயற்பொறியாளர் அரசு, ஏரி பாசன சங்கத்தலைவர் களாம்பாக்கம் பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் களாம்பாக்கம் மற்றும் சின்னமண்டலி பகுதியில் இருந்து ஏரி நீரை பயன்படுத்தும் திரளான விவசாயிகள் கலந்து கொண்டனர். அவர்களுக்கு பயிற்சியாளர்கள் பத்மநாபன், ரங்கராஜன் ஆகியோர் கொண்ட குழுவினர் நீர்ப்பாசன அமைப்பு முறையை எடுத்து கூறி நீரினை சிக்கனமாக பயன்படுத்துவது குறித்து விளக்கம் அளித்தனர்.

## அதிக மகசூல் பெறுவது குறித்து உளுந்து பயிரிட்ட விவசாயிகளுக்கு அதிகாரி ஆலோசனை



தியாகதுருகம், அதிக மகசூல் பெறுவது குறித்து உளுந்து பயிரிட்ட விவசாயிகளுக்கு அதிகாரி ஆலோசனை தெரிவித்துள்ளார்.

### உளுந்து பயிர் சாகுபடி

விழுப்புரம் மாவட்டம் தியாகதுருகம் பகுதியில் கடந்த சில நாட்களாக வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. இதனால் மகிழ்ச்சியடைந்த தியாகதுருகம் ஒன்றியத்திற்கு உட்பட்ட கனங்கூர், பொரசக்குறிச்சி, எஸ்.ஒகையூர், விருகாவூர், அசகளத்தூர் உள்ளிட்ட 25-க்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் சுமார் 12 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்களில் உளுந்து பயிர் செய்து பரா மரித்து வளர்த்து வருகின்ற னர்.

அதிக மகசூலை பெறுவது எப்படி?

இதுகுறித்து வேளாண்மை உதவி இயக்குனர் ராமச்சந் திரன் கூறுகையில், த¤யாக துருகம் பகுதியில் வம்பன் 3, 4, 5, டியு- 94 போன்ற உளுந்து ரகங்களை விவசாயிகள் அதி களவில் பயிர் செய்து வரு கின்றனர். இப்பயிரில் அதிக பூக்கள், காய்கள் பிடிக்கவும் மகசூல் அதிகரிக்க தழைச்சத்து மற்றும் மணிச்சத்து அவசியம் என்பதால் விவசாயிகள் 18 கிலோ தழைச்சத்து, 46 கிலோ மணிச்சத்து கொண்ட டை- அம்மோனியம் பாஸ்பேட் உரத்தை கரைசலாக்கி இலை வழியாக தெளிக்க வேண்டும். ஏக்கர் ஒன்றுக்கு 4 கிலோ டை-அம்மோனியம் பாஸ்பேட் உரத்தை 200 லிட்டர் தண்ணீரில் கரைத்து தெளிக்க வேண்டும். அது போல் டி.ஏ.பி 2 சதவீத கரைசலை பூக்கும் தருணத்தில் ஒரு முறையும் பின்னர் 15 நாட்கள் கழித்து மீண்டும் தெளிப்பதால் பூக்கள் பிடிப்பது அதிகரித்து அதிக மகசூல் கிடைக்கும் என்றார்.